புதிய **யுகம்** படைக்கும்

# தாமரை வாக்குறுதி 2026




## பாரதிய ஜனதா கட்சி, தமிழ்நாடு



# ‘ஐந்திணை’ காப்போம்; தமிழகத்தை முதன்மை மாநிலமாக்குவோம்!





# எங்கள் குறிக்கோள்

தமிழகம் இன்று ஒரு முக்கியமான தருணத்தில் நிற்கிறது. அதன் பழமையான பாரம்பரிய அறிவைக் கொண்டு செழுமையான முறையில் தனது நவீனக்கனவுகளை அடையக்கூடிய ஒரு திருப்புமுனை தருணம் இது. நமது 'விக்சித் பாரத் 2047' (வளர்ச்சியடைந்த இந்தியா 2047) எனும் தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில் தமிழகத்தை அதிக வளம் மிக்கதாகவும், அனைவரையும் உள்ளடக்கியதாகவும் நம் மனக்கண் முன்பு கொணர்ந்து கற்பனை செய்து பார்க்கிறோம். மேலும், இந்தியாவை ஒரு வளர்ச்சியடைந்த நாடாக உருமாற்றுவதில் தமிழகம் முக்கியப் பங்காற்றும் சக்தியாகவும் இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

கலாச்சாரப் பெருமிதம், நிலையான வளர்ச்சி மற்றும் பாஜக முன்வைக்கும் மக்களாட்சி ஆகிய விழுமியங்களில் வேரூன்றி, பாரம்பரியத்தையும் புதுமையையும் ஒருங்கிணைத்து, தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பது இந்தியாவின் உலகளாவிய எழுச்சியின் ஒரு அடித்தளமாக மாறுவதை இந்த தொலைநோக்குப் பார்வை உறுதி செய்கிறது.

தமிழகத்திற்கே உரித்தானது **'ஐந்திணை'** என்னும் சங்க கால வாழ்வியல் தத்துவம். காலத்தால் அழியாத இத்தத்துவத்தை உத்வேகமாக கொண்டு, இயற்கை, கலாச்சாரம், பொருளாதாரம் மற்றும் மனித மதிப்பீடுகளின் வாயிலாக தமிழக வளர்ச்சியை நாங்கள் மறுவரையறை செய்திருக்கிறோம்.

## குறிஞ்சி

தமிழ்நாட்டின் மலைப்பகுதிகளான குறிஞ்சியில், பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாப்பதோடு, சூழலியல் சுற்றுலா, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகியவற்றின் மூலம் நிலையான வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் வளமான எதிர்காலத்தை எதிர்நோக்குகிறோம்.

## முல்லை

முல்லை நிலப்பகுதியான காடு சார்ந்த இடங்களில், கால்நடைகள் பராமரிப்பு, பால்வள மேம்பாடு மற்றும் வனப்பாதுகாப்பின் மூலம் நிலையான பொருளாதாரத்தை வலுப்படுத்த உறுதிபூண்டுள்ளோம். இது முல்லைக்கே உரிய அமைதி மற்றும் பொறுமையாக மீண்டெழும் பண்பினை பிரதிபலிக்கும்.

## மருதம்

மருத நிலத்தின் வயல்வெளிகளை வளமானதாகி, உழவர் பாதுகாப்பை முதன்மையாக்கும், விவசாயப் புரட்சியினை முன்னெடுப்பதே லட்சியம். புதிய தொழில்நுட்பம், மேம்பட்ட பாசன வசதி மற்றும் நியாமான சந்தை வாய்ப்புகள் மூலம் விவசாயிகளின் வாழ்வை செழிப்பாக்கி, மாநிலம் மற்றும் தேசத்தின் உயர்விற்கு வழிவகுப்போம்.

# எங்கள் குறிக்கோள்

## நெய்தல்

பரந்து விரிந்த நெய்தல் கடற்கரைப் பகுதிகளில், நவீன மீன்பிடி முறைகள், மேம்படுத்தப்பட்ட கடலோர உள்கட்டமைப்புகள் மற்றும் கடல்சார் சூழலியல் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு செழிப்பான 'நீலப் பொருளாதாரத்தை' (Blue Economy) உருவாக்க விழைகிறோம். அதே வேளையில், மீனவர்களின் கண்ணியமும் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும்.

## பாலை

பாலை நிலத்தின் வறண்ட நிலப்பரப்புகளில் நீர் பாதுகாப்பு, காலநிலை மாறுபாடுகளை தாங்கும் மீள்திறன் மற்றும் தொலைதூரப் பகுதிகளை இணைக்கும் உள்கட்டமைப்பு ஆகியவற்றின் மூலம், இடர்பாடுகளையும் மீறிய வளர்ச்சியினை உறுதியாக்குவோம். பற்றாக்குறைகளுக்கு முடிவுகட்டுவோம்.

இந்த ஐந்து நிலப்பரப்புகளும் ஒன்றிணைந்து தமிழகத்தின் பன்முகத்தன்மையைத் தூக்கிப்பிடிப்பதோடு, அதன் பொருளாதார ஆற்றலை வெளிப்படுத்தும் முழுமையானதொரு வளர்ச்சி மாடலை உருவாக்குகின்றன. இந்த தொலைநோக்குப் பார்வை, பாரம்பரியத்தைத் தனித்து வைத்திராமல், முன்னேற்றத்தோடு இணைத்துச் செயல்படுத்தும் ஒரு முன்மாதிரி மாநிலமாக தமிழகத்தை நிலைநிறுத்தும்.

தமிழகத்தின்  ஆன்மாவையும், விக்சித் பாரதத்தின் (வளர்ச்சியடைந்த பாரதம்) லட்சியத்தையும் ஒன்றிணைப்பதன் மூலம், கலாச்சாரத்தில் வேரூன்றிய, பொருளாதார - சமூக ரீதியில் பேராற்றல் மிக்க, மற்றும் சுற்றுச்சூழலுக்கு நிலையான வளம் பொருந்திய தமிழகத்தை உருவாக்குவதே எங்களது உன்னத நோக்கமாகும்.

தமிழகம் வளர்ச்சியடையும் போது, அது வெறும் ஒரு மாநில வளர்ச்சி மாத்திரமல்ல. 2047-ஆம் ஆண்டிற்குள் அதிவளர்ச்சியடைந்த, ஒரு வலிமையான இந்தியாவை கட்டமைக்கும் பயணத்தில் தமிழகத்தின் வளர்ச்சி ஒரு மைல்கல் ஆக இருக்கும். உலக அரங்கில்,  இந்தியாவின் பேரெழுச்சிக்கு வித்திட்ட பெருமை தமிழகத்திற்கு உண்டாகும்.

# நன்றி

தமிழகம் இப்போது மாற்றத்திற்குத் தயாராகிவிட்டது. தமிழக மக்கள் முன்னுள்ள தேர்வு மிகத் தெளிவானது. ஒரு பாதை வாரிசு அரசியலுக்கும் ஊழலுக்கும் இட்டுச் செல்கிறது. மற்றொரு பாதை வளர்ச்சி, வாய்ப்பு மற்றும் நேர்மையான ஆட்சிக்கு வழிவகுக்கிறது.

திரு. நரேந்திர மோடி அவர்கள்





# திரு. நயினார் நாகேந்திரன் அவர்களின் தமிழக மக்களுக்கான கடிதம்

**அன்பு சகோதர சகோதரிகளே,**
**வணக்கம்.**

தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சியின் கனிவான வாழ்த்துக்கள்.

இந்தியாவின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றப் பாதையில் தமிழகம் நீண்டகாலமாக முன்னணியில் இருந்து வருகிறது. இது தமிழக மக்களின் இலட்சியங்கள், துணிச்சலான முயற்சிகள் மற்றும் மன உறுதியால் செதுக்கப்பட்டது. தமிழகத்தின் பரந்த கடற்கரை மற்றும் வளமான டெல்டா பகுதிகள் முதல், வளர்ந்து வரும் நகர்ப்புற மையங்கள் மற்றும் கிராமப்புறங்கள் வரை, **இந்த மாநிலம் கடின உழைப்பு மற்றும் லட்சியத்தின் வலிமையான உணர்வைப் பிரதிபலிக்கிறது**. தேசத்தின் வளர்ச்சிக்குத் தனது நீடித்த பங்களிப்பை அளிப்பதன் மூலம், பொருளாதார வலிமை மற்றும் சமூக முன்னேற்றத்தின் தூணாகத் தமிழகம் தொடர்ந்து திகழ்கிறது.

பாரதிய ஜனதா கட்சி எப்போதும் தமிழக மக்களுக்குத் துணையாக நின்றுள்ளது. பேரிடர் காலங்களாக இருந்தாலும் சரி அல்லது அன்றாட ஆட்சி நிர்வாக முயற்சிகளாக இருந்தாலும் சரி, எங்களது தொண்டர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடனும் சேவை மனப்பான்மையுடனும் மக்களிடையே தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் தலைமையின் கீழ், **வளர்ச்சி, நல்லாட்சி மற்றும் ஒவ்வொரு குடிமகனையும் மேம்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு** ஆகியவற்றின் மூலம் இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் அடைந்துள்ளது.

2026 தமிழக சட்டமன்றத் தேர்தலை நாம் நெருங்கி வரும் வேளையில், நமது மாநிலத்தின் எதிர்காலத்திற்கான ஒரு வழிகாட்டியாக இந்தத் தேர்தல் அறிக்கையை சமர்ப்பிக்கிறோம். இது வெறும் தேர்தல் அறிக்கை மட்டுமல்ல, தமிழக மக்களின் குரல்கள் மற்றும் லட்சியங்களின் பிரதிபலிப்பாகும். விவசாயிகள், மீனவர்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் சமூகத்தின் பல்வேறு பிரிவினருடன் தொடர்ந்து கலந்துரையாடி இது உருவாக்கப்பட்டுள்ளது. இந்த தேர்தல் அறிக்கையின் மூலம், வளமான தமிழகத்தைப் படைக்க **“யாதும் ஊரே யாவரும் கேளிர்”** என்ற நமது மகத்தான இலட்சியங்களை முன்னோக்கி எடுத்துச் செல்கிறோம்.

இந்தத் தருணத்தில், தமிழ் மக்களின் லட்சியங்களை பிரதிபலிக்கும் வகையில் இந்தத் **தேர்தல் அறிக்கையை உருவாக்குவதில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவிற்கு எனது நன்றியையும் நல்வாழ்த்துகளையும்** தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தேர்தல் அறிக்கையின் மூலம், பாரதிய ஜனதா கட்சி தீர்க்கமான மற்றும் பொறுப்புள்ள ஆட்சியை வழங்க உறுதியளிக்கிறது. பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துதல், பெரிய அளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், விவசாயம் மற்றும் மீன்வளத் துறையை வலுப்படுத்துதல், உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் சுகாதாரம் மற்றும் கல்வியின் தரத்தை உயர்த்துவதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

**இந்த ஆவணம் மக்களுக்கு நாங்கள் அளிக்கும் வாக்குறுதி; இது வளர்ச்சி, நல்லாட்சி மற்றும் உண்மையான மாற்றத்திற்கான உறுதிமொழி**.

மாற்றத்திற்கான உணர்வு தமிழகம் எங்கும் பரவட்டும், மாநிலத்தை வளர்ச்சியை நோக்கியும், நல்லாட்சியை நோக்கியும், வாய்ப்புகள் நிறைந்த எதிர்காலத்தை நோக்கியும் நாங்கள் வழிநடத்துவோம்.



**நல்வாழ்த்துகளுடன்,**

**நயினார் நாகேந்திரன்**
மாநிலத் தலைவர், தமிழ்நாடு பாஜக

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 01 | நிர்வாகம் மற்றும் சட்டம் & ஒழுங்கு | 38 |
| 02 | சமூக நீதி | 44 |
| 03 | மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாடு | 50 |
| 04 | இளைஞர்கள், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு | 54 |
| 05 | விவசாயிகளும் விவசாயமும் | 58 |
| 06 | மீனவர்களும் மீன்வளமும் | 64 |
| 07 | அனைவருக்கும் ஆரோக்கியம் | 68 |
| 08 | தமிழ் கலாச்சாரமும் சுற்றுலாத்துறையும் | 74 |
| 09 | பொருளாதாரமும் தொழில்துறையும் | 80 |
| 10 | உட்கட்டமைப்பு | 84 |
| 11 | நீர் வளம் மற்றும் சுற்றுச்சூழல் | 88 |
| 12 | சென்னை பகுதி | 92 |
| 13 | கொங்குப் பகுதி | 96 |
| 14 | தெற்குப் பகுதி | 100 |
| 15 | வடக்குப் பகுதி | 104 |
| 16 | டெல்டா பகுதி | 108 |



# முக்கிய வாக்குறுதிகள்

1. குடும்பத் தலைவிகள் அனைவருக்கும் மாதந்தோறும் **₹2,000 உதவித்தொகை** மற்றும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் **₹10,000 நிதியுதவியாக** ஒருமுறை வழங்கப்படும்.

2. ஆண்டுக்கு **3 விலையில்லா கேஸ் சிலிண்டர்கள்** வழங்கப்படும். அவை பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தீபாவளி பண்டிகைகள் பொழுது வழங்கப்படும்.

3. பெண்களுக்கு எதிரான குற்றங்களை ஒழிக்கப் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுப்போம். இதற்காகத் தடையற்ற **'ஜீரோ-எப்ஐஆர்'** (Zero-FIR) பதிவுமுறை, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளருக்கான பாதுகாப்பு, பாலியல், போக்ஸோ குற்றங்கள் உள்ளிட்ட கொடூரமான வழக்குகளை விசாரிக்க **சிறப்பு விரைவு நீதிமன்றங்கள்**, பேருந்துகள், பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் **100% கண்காணிப்பு கேமரா** (CCTV) வசதி மற்றும் **'நிர்பயா' நிதியை** முழுமையாகப் பயன்படுத்துவது ஆகியவற்றை உறுதி செய்வோம்.

4. பெண்கள் தலைமையிலான கூட்டுறவு சங்கங்கள், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு (MSME), உற்பத்தி அலகுகளை அமைக்க **₹50 லட்சம் வரை வட்டி இல்லாக் கடன்கள்** வழங்கப்படும். மேலும், அரசின் கொள்முதலில் பெண்களுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு **20% இட ஒதுக்கீடு** (Procurement Quota) கட்டாயமாக்கப்படும்.

5. முருகப் பெருமானின் பெருமையைப் போற்றும் வகையில், **தைப்பூசத் திருநாளை** மாநில விழாவாக அறிவிப்போம்.

6. திருப்பரங்குன்ற மலை உச்சியில் **கார்த்திகை தீபம் ஏற்றும்** பாரம்பரியம் மீண்டும் தொடங்கப்படுவதையும், அது காலம் முழுவதும் பாதுகாக்கப்படுவதையும் உறுதி செய்வோம்.

7. போதைப்பொருள் இல்லாத தமிழகத்தை உருவாக்க, சிறப்பு போதைப்பொருள் தடுப்புப் படை பிரிவுடன் கூடிய **'தமிழக போதைப்பொருள் ஒழிப்புத் துறை'** உருவாக்கப்படும். கடல்வழி கடத்தலைத் தடுக்க **'கடலோர போதைப்பொருள் புலனாய்வுப் பிரிவு'**, துரித நடவடிக்கைக்காக பிரத்யேக உதவி எண், சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்படும். மேலும், மீண்டும் குற்றம் செய்வோர் மற்றும் போதைப்பொருள் கடத்தல் கும்பல்களுக்கு NDPS சட்டத்தின் கீழ் **மரண தண்டனை** வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

8. **'உழவே தலை'** திட்டத்தைத் தொடங்கி, பிஎம்-கிசான் நிதியுதவியுடன் மாநில அரசின் பங்காக **₹3,000 கூடுதலாக** வழங்கி, ஆண்டுக்கு மொத்தம் ₹9,000 நிதியுதவி வழங்குவோம். மேலும், **மாநிலக் கூட்டுறவு பருத்தி உற்பத்தியாளர்கள் சங்கம்** அமைக்கப்பட்டு, **100 கி.மீ தொலைவிற்குள் பருத்தி அரைக்கும் ஆலைகள்** (Ginning Mills) நிறுவப்படும். அத்துடன் மரவள்ளிக்கிழங்கு, தக்காளி, மாம்பழம், வாழை மற்றும் மிளகாய் ஆகிய பயிர்களுக்கு உறுதி அளிக்கப்பட்ட சந்தை ஆதரவு வழங்கப்படும்.

# முக்கிய வாக்குறுதிகள்

9. பஞ்சாயத்து அளவில் தானியங்கள் மற்றும் பருப்பு வகைகளுக்காக சிறிய எஃகு சேமிப்புக் கிடங்குகளையும் (Steel Silos), பழங்கள், காய்கறிகள் மற்றும் மலர்களுக்காகக் குளிர்பதனக் கிடங்குகளையும் அமைப்பதன் மூலம், சேமிப்பு இழப்புகளையும் அவசர காலத்தில் குறைவான விலைக்கு விற்பனை செய்வதையும் (Distress sales) தடுப்போம். மேலும், வட்டார அளவில் போக்குவரத்து வசதியுடன் கூடிய சந்தை இணைப்பு மையங்களையும் (Market Connector Hubs), மாவட்ட அளவில் பிரம்மாண்ட எஃகு சேமிப்புக் கிடங்குகளையும் உருவாக்கித் தடையற்ற பாதுகாப்பை உறுதி செய்வோம்.

10. 'உழவர் உறுதுணைத் திட்டத்தின்' கீழ், சிறு மற்றும் குறு விவசாயிகள் கால்நடை வளர்ப்பு, இறால் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்றவற்றைத் தொடங்குவதற்கு ஒருமுறை நிதியுதவியாக ₹50,000 வழங்கப்படும்.

11. மீனவர்களுக்கு நியாயமான இழப்பீட்டை வழங்கும் வகையில், 61 நாட்கள் மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையை ₹8,000-லிருந்து ₹12,000-ஆகவும், மீன்பிடி குறைநிலை காலத்திற்கான உதவித்தொகையை ₹6,000-லிருந்து ₹8,000-ஆகவும் உயர்த்துவோம். மேலும், 60 வயதிற்கு மேற்பட்ட மீனவர்களுக்கு மாதந்தோறும் ₹2,000 ஓய்வூதியம் வழங்கப்படும்.

12. தமிழக இளைஞர்களின் பிரகாசமான எதிர்காலத்தை உறுதி செய்ய, முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு ₹10 லட்சம் வட்டியில்லா கடன், வேலைவாய்ப்பின்மை காரணமாக இ.எம்.ஐ (EMI) செலுத்த முடியாதவர்களுக்குக் கல்விக்கடன் தள்ளுபடி மற்றும் 1 லட்சம் அரசு வேலைவாய்ப்புகள் வழங்கப்படும். மேலும், அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு இலவசப் பயிற்சி, மாவட்டந்தோறும் தமிழ் வழியிலும் பயிற்சி அளிக்கும் போட்டித் தேர்வு மையங்கள், திறன் கணக்கெடுப்பு மற்றும் தொழில்துறையுடன் இணைந்த பயிற்சிகள் வழங்கப்படும்.

13. தமிழ்நாட்டின் 10 நகரங்களை தேசத்தின் முதல் 100 தூய்மையான நகரங்கள் பட்டியலில் இடம்பெறச் செய்வோம்.

14. 12-ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்களை எதிர்காலத்திற்குத் தயார்படுத்தும் வகையில், ஒவ்வொரு வட்டார வள மையத்திலும் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் ரோபாட்டிக்ஸ் (Robotics) துறைகளில் செய்முறைப் பயிற்சிகளுடன் கூடிய பிரத்யேக வாராந்திரப் பயிற்சி வகுப்புகள் வழங்கப்படும்.

15. முதன்முறை தொழில் தொடங்கும் 2,000 இளைஞர்களுக்கு 5 ஆண்டு காலத்திற்கு ₹15 லட்சம் வரை வட்டியில்லா கடன், ஜிஎஸ்டி (GST) தொடர்பான சலுகைகள் மற்றும் மானியங்கள் வழங்கப்படும்.

# முக்கிய வாக்குறுதிகள்

16. மின்சார இருசக்கர வாகனங்கள் (e-scooters) வாங்குவதற்குத் தகுதியுள்ள பெண்களுக்கு **₹25,000 மானியம்** வழங்கப்படும்.

17. தமிழக நாட்டுப்புறக் கலைகள் மற்றும் கோவில் மரபுகளைப் பாதுகாக்கும் வகையில், **'திருக்கோவில் நித்ய பூஜை தொகுப்புத் திட்டம்'** செயல்படுத்தப்படும். இதன் மூலம் மாதந்தோறும் அத்தியாவசியப் பொருட்கள் (கற்பூரம், நெய்/எண்ணெய், 60 கிலோ அரிசி, குங்குமம், மஞ்சள், விபூதி), ஒருமுறை வழங்கப்படும். கோயில் உபகரணங்கள் (கோயில் மணி, தாம்பூலம், ஆர்த்தி தட்டுகள், வேட்டித் தொகுப்பு) மற்றும் கோவில் திருவிழாக்கள் மற்றும் பராமரிப்பிற்காக ஆண்டுக்கு **₹25,000 நிதியுதவி** வழங்கப்படும்.

18. மத்திய அரசின் தொலைநோக்குத் திட்டமான **'பாரத் உத்யோகிக் விகாஸ் யோஜனா'** (BHAVYA) திட்டத்தின் கீழ், தமிழகத்தில் **10 'பிளக்-அண்ட்-பிளே' (Plug-and-Play) தொழிற்பூங்காக்கள்** அமைக்கப்படுவதை உறுதி செய்ய மத்திய அரசுடன் இணைந்து செயல்படுவோம். தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளும் தயார் நிலையில் உள்ள இந்தத் தொழிற்பூங்காக்கள் மூலம், தமிழகத் தொழிலதிபர்கள் அத்திட்டத்தின் முழுப் பலன்களையும் பெறுவதை நமது அரசு உறுதி செய்யும்.

19. இ-ஷ்ரம் (e-Shram) போர்ட்டலில் 100% பதிவை உறுதி செய்வதன் மூலம் கிக் தொழிலாளர்களை (Gig workers) ஆதரிப்போம். மாதந்தோறும் **₹1,500** மின்வாகன சார்ஜிங் அல்லது எரிபொருள் மானியம், ஒருமுறை வழங்கப்படும் ஐஎஸ்ஐ (ISI) சான்றளிக்கப்பட்ட **பாதுகாப்புக் கருவிகள்** மற்றும் விபத்துக் காப்பீட்டுத் தொகையை **₹5 லட்சத்திலிருந்து ₹10 லட்சமாக** உயர்த்தி வழங்குவோம்.

20. ஒவ்வொரு **மாவட்ட அரசு மருத்துவமனையையும் மேம்படுத்தும்** வகையில், கூடுதல் 3 ஆம்புலன்ஸ்கள், உயர் சிறப்புப் பிரிவுகள் (Super-speciality wings), இலவச டயாலிசிஸ் மையங்கள், போதை மீட்பு மற்றும் மறுவாழ்வு மையங்கள், 4 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவுகள் (ICU), முழுமையாகச் செயல்படும் நவீன அறுவை சிகிச்சை அரங்குகள், முதியோர் நல மையங்கள், 10 படுக்கைகள் கொண்ட நவீன குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவுகள் (PICU) மற்றும் பிரத்யேகத் தாய்ப்பால் வங்கிகள் ஆகியவை அமைக்கப்படும்.

21. 65 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கு ஆண்டுதோறும் இல்லத்திற்கே சென்று **இலவச உடல்நலப் பரிசோதனை** செய்யும் திட்டம், மாவட்டந்தோறும் ஒருங்கிணைந்த **போதை மீட்பு மற்றும் மறுவாழ்வு மையங்கள்**, அதிநவீன இசிஆர் (ECR) **விபத்து சிகிச்சை மையம்**, இருசக்கர வாகன ஆம்புலன்ஸ்களின் எண்ணிக்கையை **50-ஆக உயர்த்துதல்** மற்றும் அரிய வகை நோய்கள் பாதுகாப்பிற்காக **₹100 கோடி** மதிப்பிலான சிறப்புத் திட்டம் ஆகியவற்றின் மூலம் மாநில அளவிலான சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்துவோம்.

# முக்கிய வாக்குறுதிகள்

22. மத்திய அரசுடன் இணைந்து, நிலத்தை நியாயமான விலையில் கையகப்படுத்துவதன் மூலம் **தமிழகத்தின் இரயில்வே கட்டமைப்பை முழுமையாக விரிவுபடுத்துவோம்**. இதற்காக சென்னை - பெங்களூரு மற்றும் சென்னை - ஹைதராபாத் இடையே **அதிவேக இரயில் வழித்தடங்கள்** (High Speed Rail Corridors), கோவை - திருப்பூர் - சேலம் இடையே **பிராந்திய அதிவேக போக்குவரத்து அமைப்பு** (RRTS), விழுப்புரம் - சென்னை இடையே **சிறு-நகர்ப்புற இரயில் சேவை** (Semi-Urban Rail), **ஹைட்ரோ பவர் ரயில்** திட்டம் (Hydro Power Train) மற்றும் சென்னையை டெல்லி, மும்பை, கொல்கத்தா ஆகிய நகரங்களுடன் இணைக்கும் **புதிய படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத்** (Sleeper Vande Bharat) இரயில்கள் போன்ற திட்டங்கள் மூலம் இரயில் இணைப்பை விரிவுபடுத்துவோம்.

23. நவீன காலத் தொழில்நுட்பங்கள் குறித்த பாடத்திட்டங்களை வழங்கும் **தமிழ்நாடு மாநில திறன் மேம்பாட்டுப் பல்கலைக்கழகத்தை** நிறுவி, மாநிலத்தின் அனைத்து மண்டலங்களிலும் அதன் வளாகங்களை அமைப்போம்.

24. தமிழகத்தை இந்தியாவின் **கடல்நீர் சுத்திகரிப்புத் தலைநகராக (Desalination Capital of India)** மாற்றுவோம்; இதற்காகக் கூடுதலாக **500 MLD** திறன் கொண்ட கடல்நீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்தல், வட்டப் பெருங்குழாய் வழித்தடம் (Ring main network) மூலம் நீர் அமைப்புகளை இணைத்தல் மற்றும் **கடலூரில்** பிரத்யேகக் கடல்நீர் சுத்திகரிப்பு ஆராய்ச்சி மையத்தை நிறுவுதல் போன்ற நடவடிக்கைகளை எடுப்போம்.

25. மத்திய அரசின் **'பி.எம். சூர்ய கர் முஃப்த் பிஜிலி யோஜனா'** (PM Surya Ghar Muft Bijli Yojana) திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் தமிழகப் பயனாளிகள் ஒவ்வொருவருக்கும், மத்திய அரசின் ஊக்கத்தொகையுடன் மாநில அரசின் பங்காக **₹25,000 கூடுதல் ஊக்கத்தொகை** (State Top-Up) வழங்கப்படும்.

26. தமிழகத்தின் கடல், மலைகள், காடுகள், கோயில்கள் மற்றும் பண்பாடு சுற்றுலா மூலம் ஆண்டு முழுவதும் சுற்றுலாவை மேம்படுத்துவோம்; அத்துடன், நாட்டுப்புற மரபுகள் மற்றும் உள்ளூர் தெய்வங்களின் சிறப்புகளைப் பறைசாற்றும் வகையில் நாடு தழுவிய அளவில் **'தமிழக கிராம தெய்வங்கள் சங்கமம்'** நிகழ்ச்சியை நடத்துவோம்.

27. தென் தமிழகத் திருத்தலப் பயண அனுபவங்களை மேம்படுத்தும் வகையில் **'தென் தமிழகத் திருத்தல யாத்திரை'** திட்டம் செயல்படுத்தப்படும்; இதன் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக பக்தர்கள் வருகை தரும் முக்கிய கோவில்களில், நாளொன்றுக்கு **இரண்டு மணி நேரம் உள்ளூர் மக்களுக்காக பிரத்யேக தரிசன நேரம்** ஒதுக்கப்படும்.



# முக்கிய வாக்குறுதிகள்

1

தமிழகக் குடும்பத் தலைவிகள் அனைவருக்கும் **மாதம் ₹2,000 உதவித்தொகை** வழங்குவோம். குடும்பங்களை வலுப்படுத்துவதில் அவர்களின் முக்கிய பங்கினை அங்கீகரித்து, அவர்களுக்கு இன்றியமையாத பொருளாதார உதவியை இதன் மூலம் வழங்குவதே எங்களின் நோக்கம். மேலும், தற்போதைய மாநில அரசின் கீழ், இடைவிடாத விலைவாசி உயர்வு, மின்சாரக் கட்டண உயர்வு மற்றும் சொத்து வரி உயர்வு ஆகியவற்றால் கட்டுக்கடங்காத பணவீக்கம் ஏற்பட்டுள்ளது. அதே சமயம் எவ்வித நிவாரணமுமின்றி தமிழகக் குடும்பங்களை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது. இதனைச் சரிசெய்ய, ஒவ்வொரு குடும்பத்திற்கும் **₹10,000 நிதியுதவியாக** ஒருமுறை வழங்கப்படும்.





# முக்கிய வாக்குறுதிகள்




2

திமுக ஆட்சியில் விலைவாசி உயர்வால் அவதிப்படும் தமிழகப் பெண்களின் சுமையைக் குறைக்கும் வகையில், ஆண்டுக்கு **3 விலையில்லா கேஸ் சிலிண்டர்கள்** வழங்கப்படும். அவை பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தீபாவளி ஆகிய பண்டிகைக் காலங்களில் வழங்கப்படும். இதன் மூலம் தமிழகப் பெண்கள் ஒவ்வொரு பண்டிகையையும் எவ்விதச் சிரமமுமின்றி மிகுந்த மரியாதையுடன் கொண்டாடுவது உறுதி செய்யப்படும்.

# முக்கிய வாக்குறுதிகள்

**3**

போதைப்பொருள் புழக்கமானது மக்களை அடிமையாக்குவதோடு மட்டும் நிற்காமல், தமிழகம் முழுவதுமுள்ள நமது பெண்களின் பாதுகாப்பிற்கே சவாலாக மாறியுள்ளது. போதைப்பொருள் புழக்கத்தையும், அதனால் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களையும் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குவதற்கு, நமது அரசு பின்வருவனவற்றை உறுதி செய்யும்:

a. குற்றங்களைப்பதிவுசெய்யும்நடைமுறைகளைஎளிமைப்படுத்த, உரிய காலத்தில் **குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுவதும், 'ஜீரோ-எப்.ஐ.ஆர்' (Zero-FIR) முறையும் நிலைநாட்டப்படும்.**

b. நீதி வழங்கும் நடைமுறையில், **சாட்சியாளர்களுக்கும் பாதிக்கப்பட்டோருக்கும் முழுமையான பாதுகாப்பு** உறுதி செய்யப்படும்.

c. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் (POCSO) உள்ளிட்ட கொடூர குற்றங்களுக்கு விரைந்து நீதி வழங்க, **'சிறப்பு விரைவு நீதிமன்றங்கள்'** நிறுவப்படும்.

d. அனைத்து பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் சிசிடிவி (CCTV) கண்காணிப்பை ஆய்வு செய்வதுடன், பேருந்துகளில் **100% சிசிடிவி கண்காணிப்பு** இருப்பதை உறுதி செய்வோம்.

e. மத்திய அரசின் **'நிர்பயா நிதி'** சிறந்த முறையில் முழுமையாகப் பயன்படுத்துவது உறுதி செய்யப்படும்.





# முக்கிய வாக்குறுதிகள்



**4**

மகளிர் கூட்டுறவு சங்கங்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் (SHGs) மற்றும் சிறு, குறு, நடுத்தரத் தொழில்களை (MSMEs) வலுப்படுத்த பின்வரும் திட்டங்களை செயல்படுத்துவோம்:

a. பல்வேறு துறைகளில் உற்பத்தி ஆலைகளை நிறுவுவதற்காக, **₹50 லட்சம் வரை வட்டியில்லா கடன்** வழங்கப்படும்.

b. அரசுக் கொள்முதலில், பெண்கள் நடத்தும் வணிக நிறுவனங்களுக்கு **20% இடஒதுக்கீடு** கட்டாயமாக்கப்படும்.



# முக்கிய வாக்குறுதிகள்



**5**

தமிழறிவு, வீரம் மற்றும் பண்பாட்டின் கலங்கரை விளக்கமாகத் திகழும் தமிழ்க் கடவுள் முருகப் பெருமானின் புகழைப் போற்றும் வகையில், அவரது ஆன்மீக மற்றும் கலாச்சார முக்கியத்துவத்தை அங்கீகரித்து, **தைப்பூசத் திருநாளை மாநில விழாவாக அறிவித்து கொண்டாடுவோம்**.

**6**

திருப்பரங்குன்ற மலை உச்சியில் **தீபத்தூணில் தீபம்** ஏற்றும் கார்த்திகை தீபத் திருவிழாவின் புனிதமான மரபுகள் **தடையின்றித் தொடர்வதை உறுதி செய்து**, தமிழ் மக்களின் புனிதமான பாரம்பரியத்தைப் பாதுகாப்போம். இந்தப் பழக்கத்தை வரும் தலைமுறையினருக்கும் கொண்டு செல்லத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்.







# முக்கிய வாக்குறுதிகள்

**7**

தற்போதைய மாநில அரசின் கீழ் வேரூன்றியுள்ள போதைப்பொருள் புழக்கத்தை அறவே ஒழிக்க, எவ்வித சமரசமுமற்ற, மிகக் கடுமையான (Zero-tolerance) ஆட்சியை நாங்கள் உறுதி செய்வோம். தீர்க்கமான மற்றும் சமரசமற்ற நடவடிக்கைகள் மூலம் **'போதைப்பொருள் இல்லாத தமிழகத்தை'** உருவாக்குவோம்:

a. அமலாக்கம், விசாரணை மற்றும் விழிப்புணர்வு ஆகியவற்றை மேற்கொள்ள, **'தமிழ்நாடு போதைப்பொருள் ஒழிப்புத் துறை'** (TN-DED) என்ற தனிப்பிரிவு உருவாக்கப்படும். போதைப்பொருள் கடத்தல் மற்றும் பயன்பாட்டைத் தடுக்க, முழு தன்னாட்சியுடன் செயல்படும் இந்தச் சிறப்புப் படை, குற்றவாளிகளுக்கு ஒரு சிம்ம சொப்பனமாகவும், போதைப்பொருள் புழக்கத்திற்கு ஒரு முற்றுப்புள்ளியாகவும் அமையும்.

b. கடல் வழியாக நடைபெறும் போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க, இந்தியக் கடலோரக் காவல்படை மற்றும் மாநிலக் காவல்துறையுடன் இணைந்து செயல்படும் வகையில், **'போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவு'** ஒன்று பிரத்யேகமாக நிறுவப்படும். மேலும், ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், காலதாமதமின்றி போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, தமிழகத்தை **'கஞ்சா இல்லாத மாநிலமாக'** மாற்றுவோம்.

c. போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டுகள் மற்றும் சட்டவிரோதச் செயல்பாடுகளைத் தெரிவிக்க, பிரத்யேக **'உதவி எண்'** அறிமுகப்படுத்தப்படும். பெறப்படும் ஒவ்வொரு புகாரின் மீதும் மின்னல் வேக நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, அது குறித்த தொடர் விசாரணையும் அதிகாரிகளின் பொறுப்புடைமையும் உறுதி செய்யப்படும்.

d. போதைப்பொருள் தொடர்பான வழக்குகளை அதிவிரைவாக விசாரித்து தண்டனை வழங்க, **'சிறப்பு விரைவு நீதிமன்றங்கள்'** அமைக்கப்படும். மீண்டும் மீண்டும் குற்றம் புரிவோருக்கும், போதைப்பொருள் மாஃபியா கும்பல்களுக்கும் NDPS சட்டத்தின் வரம்புகளுக்கு உட்பட்டு **'மரண தண்டனை'** பெற்றுத் தருவது உறுதி செய்யப்படும். இது பெருமளவிலான போதைப்பொருள் கடத்தலை அடியோடு ஒழிப்பதற்கான ஒரு கடுமையான எச்சரிக்கையாகவும், நமது இளைஞர்களைக் காத்து, குடும்பங்களின் பாதுகாப்பை உறுதி செய்து, வருங்காலச் சந்ததியினருக்கு ஒரு பாதுகாப்பான சமூகத்தை அமைத்துத் தரும் அரணாகவும் விளங்கும்.





# முக்கிய வாக்குறுதிகள்

## 8

விவசாயிகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காக, **‘உழவே தலை’** திட்டத்தை தொடங்குவோம். அதன் கீழ்:

a. நிதி நெருக்கடியை எதிர்கொள்ளும் தமிழக விவசாயிகளுக்கு உதவும் வகையில், **மத்திய அரசின் முதன்மைத் திட்டமான பிஎம்-கிசானில் (பிரதமரின் விவசாயிகள் கௌரவிப்பு நிதி திட்டம்) கூடுதலாக ₹3,000 மாநில நிதியுதவி வழங்கி, ஆண்டுதோறும் வழங்கப்படும் நிதியுதவியை ₹9,000 ஆக உயர்த்துவோம்**

b. தற்போதைய அரசின் கீழ் தமிழகப் பருத்தி விவசாயிகள் புறக்கணிக்கப்படுவதைச் சரிசெய்து, பருத்தி விவசாயிகளின் முன்னேற்றத்தையும் புத்துயிரூட்டலையும் ஊக்குவிக்கும் வகையில், **தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு பருத்தி விவசாயிகள் சந்தைப்படுத்தல் கூட்டமைப்பை** அமைப்போம். மேலும், பருத்தி சாகுபடி பகுதிகளிலிருந்து **100 கி.மீ. தொலைவுக்குள் ஒரு ஜின்னிங் ஆலையை** உறுதி செய்வோம்

c. தற்போதைய அரசாங்கம் சந்தை ஆதரவை வழங்கத் தவறியதாலும், அதைப் புறக்கணித்ததாலும் விவசாயிகள் கடுமையான நிதி நெருக்கடியைச் சந்தித்துள்ளனர். இதை சரிசெய்யும் வகையில் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு **மரவள்ளி, தக்காளி, மாம்பழம், வாழைப்பழம் மற்றும் மிளகாய் ஆகியவற்றுக்கு சந்தை ஆதரவு வழங்கப்படுவதை உறுதி செய்வோம்**. இதன்மூலம் நிலையான வருமானம் உறுதிப்படுத்தப்பட்டு, விவசாயக் குடும்பங்கள் நிம்மதியாக வாழும்

d. தமிழ்நாட்டின் கலாச்சாரச் சின்னமாக விளங்கும் நாட்டுப் பசு இனங்களைப் பாதுகாக்கவும், நலிவடைந்த குடும்பங்களுக்குப் பொருளாதார ரீதியாக ஒரு நிலையான மாற்று வருமான ஆதாரத்தை உருவாக்கி, அவர்களை நிலைப்படுத்தவும், புவியியல் முக்கியத்துவம் வாய்ந்த **ஒரு நாட்டுப் பசு இனத்தையோ அல்லது பால் தரும் இரண்டு ஆடுகளையோ** சிறு மற்றும் குறு பெண் விவசாயிகளுக்கு வழங்குவோம்





# முக்கிய வாக்குறுதிகள்

## 9

தற்போதைய மாநில அரசு விவசாயிகளைப் புறக்கணித்ததால், விவசாயிகளுக்கு தானிய சேமிப்பு என்பது ஒரு கானல் நீராகிவிட்டது. சேமிப்பு இழப்புகளைத் தடுக்கவும், கட்டாய விற்பனை மற்றும் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளிலிருந்து தமிழக விவசாயிகளைப் பாதுகாக்கவும், நாங்கள் பின்வருவனவற்றை நிறுவுவோம்:

a. உள்ளூர் தானியங்கள் மற்றும் பருப்பு வகைகள் சேமிப்பதற்காகப் பஞ்சாயத்து அளவில் **சிறிய எஃகுக் கிடங்குகள்**

b. வட்டார அளவில் இடைவழி சேமிப்புக் கிடங்குகளுடன் கூடிய **சந்தை இணைப்பு மையங்கள்**

c. மாவட்ட அளவில் உபரி உற்பத்தியைப் பாதுகாக்கும் வகையில் மூலோபாய இருப்பு மற்றும் **பெரிய எஃகு சேமிப்புக் கிடங்குகள்**

d. பஞ்சாயத்து அளவில் பழங்கள், காய்கறிகள் மற்றும் மலர்களுக்கான **குளிர்பதனக் கிடங்குகள்**





# முக்கிய வாக்குறுதிகள்

**10**



விவசாயிகள் ஒரே பயிர் சுழற்சியை மட்டும் சார்ந்திராமல் இருக்கவும், அவர்களது துயரைத் துடைக்கவும் **சிறு மற்றும் குறைந்த நிலப்பரப்புடைய விவசாயிகளுக்கு உழவர் உறுதுணை திட்டத்தின் கீழ், ஒருமுறை ₹50,000 நிதியுதவி** வழங்கப்படும். இதன் மூலம், கால்நடை வளர்ப்பு, மாடு வளர்ப்பு, இறால் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்பு போன்ற நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து, வருமானம் பன்முகப்படுத்தப்பட்டு, நிலையான வருவாய்க்கு வழி வகுக்கப்படும்.

**11**

தமிழக மீனவர்களுக்குக் குறிப்பாக மீன்பிடி தடை மற்றும் வருமானக் குறைபாடு காலங்களில் தேவையான ஆதரவை வழங்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். நியாயமான இழப்பீட்டையும் நிலையான வருமானப் பாதுகாப்பையும் உறுதி செய்ய, பாஜக பின்வருவனவற்றைச் செய்யும்:

a. 61 நாள் **மீன்பிடித் தடை காலத்தில்** வழங்கப்படும் இழப்பீட்டை **₹8,000-லிருந்து ₹12,000** ஆக உயர்த்துதல்

b. **மீன்பிடி குறைநிலை காலத்தில்** மீனவக் குடும்பங்களுக்கான சிறப்புப் படியை **₹6,000-லிருந்து ₹8,000** ஆக உயர்த்துதல்

c. 60 வயதுக்கு மேற்பட்ட அனைத்து மீனவர்களுக்கும் மாதம் **₹2,000 ஓய்வூதியம்** வழங்குதல்





# முக்கிய வாக்குறுதிகள்

## 12

அளவற்ற ஆற்றலைத் தன்னகத்தே கொண்டுள்ள தமிழக இளைஞர்களைச் சரியான வாய்ப்புகள் மூலம் முன்னேற்றுவதே மாநிலத்தின் வளர்ச்சிக்கான திறவுகோல். இளம் ஆற்றலை ஒருங்கிணைத்து, வளர்ந்த தமிழகத்தை உருவாக்குவதோடு, ஒரு ஒளிமயமான எதிர்காலத்தைப் பின்வருவனவற்றின் மூலம் உறுதி செய்வோம்:

a. **முதல் தலைமுறை இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு மாணவர்களுக்கு ₹10 லட்சம் வரை வட்டியில்லா கல்விக் கடன்** வழங்கப்படும்.

b. வேலைவாய்ப்பின்மை காரணமாக இ.எம்.ஐ (EMI) செலுத்த முடியாதவர்களுக்குக் **கல்விக்கடன் தள்ளுபடி** செய்யப்படும்.

c. அரசுத் துறைகளில் அனைத்துப் பிரிவுகளிலும் உள்ள காலிப்பணியிடங்களை நேர்மையான மற்றும் வெளிப்படையான முறையில் நிரப்பும் வகையில் **1 லட்சம் இளைஞர்களுக்கு அறிவிப்பு அனுப்பி, பணியில் அமர்த்தப்படுவர்.**

d. பொருளாதார நெருக்கடிகள் கல்வித் திறமையைப் பாதிக்காததை உறுதி செய்யும் வகையில் அரசுப் பணித் தேர்வுகளில் வெற்றிகரமாகத் தேர்ச்சி பெறும் பின்தங்கிய பின்னணியைச் சேர்ந்த மாணவர்களுக்கு **100% பயிற்சிக் கட்டணம் திரும்ப வழங்கப்படும்.**

e. **தமிழகத்தில் மாவட்டந்தோறும் ஒரு போட்டித் தேர்வுப் பயிற்சி மையம்** தொடங்கப்படும்.

f. முக்கிய திறன் குறைபாடுகளைக் கண்டறியவும், தொழில்துறை தேவைகளைப் பூர்த்தி செய்யும் தீர்வுகளை வடிவமைக்கவும், **தமிழகம் முழுவதும் திறன் கணக்கெடுப்பு நடத்தப்படும்.**

g. **நவீன உலகப் பொருளாதாரத்திற்குத் தேவையான தொழில்நுட்பத் திறன்களும் மென் திறன்களும்** நமது இளைஞர்களிடம் இருப்பதை உறுதி செய்யும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் **தொழில்துறை சார்ந்த வேலைப் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை** வழங்குவோம்.





# முக்கிய வாக்குறுதிகள்

13



வாரிசு அரசின் சுயநல ஆட்சி மற்றும் அவர்களின் பிளவுவாத அரசியலின் காரணமாகவே இந்தியாவின் முதல் 10 தூய்மையான நகரங்கள் பட்டியலில் தமிழ்நாட்டின் எந்தவொரு நகரமும் இடம்பெறவில்லை. மத்திய அரசின் முதன்மைத் திட்டமான **ஸ்வச் பாரத் இயக்கத்தின்** கீழ், தூய்மைக் குறியீட்டில் நமது மாநிலத்தின் நிலையை உயர்த்தி, முதல் 100 இடங்களுக்கான பட்டியலில் **தமிழ்நாட்டிலிருந்து 10 நகரங்கள் இடம் பெறுவதை உறுதி செய்வோம்**.



14

இந்தியாவின் தொழில்நுட்பப் புரட்சியை வழிநடத்தவும், எதிர்காலத்திற்குத் தயாரான தமிழ்நாட்டைக் கட்டமைக்கவும், 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அதிநவீன திறன்களையும், செயல்முறைப் புத்தாக்கங்களையும் அளித்து அவர்களை எதிர்காலத்திற்குத் தயார்படுத்தும் நோக்கில், ஒவ்வொரு வட்டார வள மையத்திலும் **செய்முறை ஆய்வகங்களுடன் கூடிய பிரத்யேகமான வாராந்திர ஒரு மணி நேர செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபோட்டிக்ஸ் பயிற்சி** வழங்கப்படும்.



# முக்கிய வாக்குறுதிகள்

15

தமிழ்நாடு முழுவதும் புத்தொழில் நிறுவனங்கள், வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் துடிப்பான புத்தாக்கச் சூழலை ஊக்குவிக்கும் வகையில் **2,000 முதன்முறை இளைய தொழில்முனைவோருக்கு 5 ஆண்டு காலத்திற்கு ₹15 லட்சம் வரையிலான வட்டியில்லா கடன்** வழங்கப்படும். மேலும், வணிக வளர்ச்சியின் ஆரம்ப ஆண்டுகளில் வரிச்சுமையைக் குறைக்கும் விதமாக, சாதகமான GST தொடர்பான ஊக்கத்தொகைகளும் மானியங்களும் வழங்கப்படும்.




16

பெண்களின் போக்குவரத்துச் சுதந்திரத்தை உறுதி செய்யவும், உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளைத் தடையின்றி அணுகவும், தகுதியுள்ள **பெண்களுக்கு மின்சார இருசக்கர வாகனங்கள்** (E-scooters) வாங்க **₹25,000 மானியம்** வழங்கப்படும். இதன் மூலம் நமது பெண்கள் தடையின்றிப் பயணித்து, சிறந்த கல்வி மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளைக் கண்டறிந்து முன்னேற வழிவகை செய்யப்படும்.





# முக்கிய வாக்குறுதிகள்

**17**

தமிழகம் ஆலயங்களின் பூமி. காலத்தால் அழியாத இத்திருக்கோயில்கள் இம்மண்ணின் மாண்பினை வடிவமைத்துள்ளதுடன், மாநிலத்தில் வலிமையான, தொடர்ச்சியான நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பாரம்பரிய மரபுகளை வெளிப்படுத்துகின்றன. இந்த வளமான நாட்டுப்புறக் கலைகள் மற்றும் கோயில் மரபுகளைப் பாதுகாக்கவும், அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லவும் பின்வருவனவற்றை மேற்கொள்வோம்:

a. **திருக்கோவில் நித்ய பூஜை தொகுப்புத்** திட்டத்தின் மூலம், கற்பூரம், நெய்/எண்ணெய், 60 கிலோ அரிசி, குங்குமம், மஞ்சள் மற்றும் விபூதி ஆகியவை அடங்கிய மாதாந்திர நித்ய பூஜை தொகுப்பு வழங்கப்படும்.

b. **கோவில் மணி, தாம்பூலம், ஆரத்தி பொருட்கள் மற்றும் பூசாரிகளுக்கு வேட்டித் தொகுப்பு** போன்ற அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படும்.

c. சிறு மற்றும் நடுத்தரக் கோவில்களின் தினசரி கோவில் செயல்பாடுகளுக்கும் பராமரிப்புகளுக்கும் **ஆண்டுக்கு ₹25,000 வழங்கப்படும்**.

d. தமிழகத்தின் செழுமையான மரபுகள், சிறு தெய்வங்கள் மற்றும் நாட்டுப்புறக் கலை வடிவங்களை வெளிப்படுத்தும் வகையில் இந்தியாவின் முக்கிய நகரங்களில் **“தமிழக கிராம தெய்வங்கள் சங்கமம்”** நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

e. ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக பக்தர்கள் வருகை தரும் முக்கியமான கோவில்களில், அந்தந்தப் பகுதிவாழ் மக்களுக்காகப் **பிரத்யேகமாக தினமும் இரண்டு மணி நேர சிறப்பு தரிசன நேரம்** அமல்படுத்தப்படும்.



# முக்கிய வாக்குறுதிகள்

**18**

மத்திய அரசின் தொலைநோக்குத் திட்டமான **'பாரத் உத்யோகிக் விகாஸ் யோஜனா'** (BHAVYA) திட்டத்தின் கீழ், **தமிழகத்தில் 10 'பிளக்-அண்ட்-பிளே' (Plug-and-Play) தொழிற்பூங்காக்கள்** அமைக்கப்படுவதை உறுதி செய்ய மத்திய அரசுடன் இணைந்து செயல்படுவோம். தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளும் தயார் நிலையில் உள்ள இந்தத் தொழிற்பூங்காக்கள் மூலம், தமிழகத் தொழிலதிபர்கள் அத்திட்டத்தின் முழுப் பலன்களையும் பெறுவதை நமது அரசு உறுதி செய்யும்.





# முக்கிய வாக்குறுதிகள்

19

தமிழ்நாட்டின் தற்போதைய மாநில அரசு **கிக் தொழிலாளர்களைக் கைவிட்டுள்ளது**. அதிகரித்து வரும் அபாயங்களுக்கு மத்தியில் அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு, நியாயமான மானியங்கள் அல்லது காப்பீடு எதுவும் இல்லாமல் பாதிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். எனினும், பொருளாதாரத்திற்கு மட்டுமின்றி சமூகத்தின் வசதிகளுக்கும் கிக் தொழிலாளர்களின் பங்களிப்பை பாஜக அங்கீகரித்து, அவர்களது சமூகப் பாதுகாப்பைப் பின்வரும் வழிகளில் வலுப்படுத்தும்:

a. அனைத்து கிக் தொழிலாளர்களுக்கும் மத்திய அரசின் முக்கிய திட்டமான **ஸ்ரம் யோகி மான்தன்** திட்டத்தின் (பிரதமரின் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்) கீழ் இ-ஸ்ரம் போர்ட்டலில் **100% பதிவை** உறுதிசெய்வோம்.

b. **ஒவ்வொரு கிக் தொழிலாளருக்கும் மாதந்தோறும் ₹1,500 வரையறையுடன் மின்சார வாகன சார்ஜிங் / எரிபொருள் மானியம்** வழங்கப்படும். மேலும், ISI சான்றிதழ் பெற்ற தலைக்கவசங்கள், பிரதிபலிப்பு ஜாக்கெட்டுகள் மற்றும் முதலுதவி கருவிகளுடன் கூடிய **பாதுகாப்பு கிட்** (Safety Kit) ஒருமுறை வழங்கப்படும்.

c. அனைத்து கிக் தொழிலாளர்களுக்கும் விபத்து காப்பீட்டுத் தொகையை **₹5 லட்சத்திலிருந்து ₹10 லட்சமாக** இரட்டிப்பாக்குவோம். இதன் மூலம் இந்த முக்கியமான தொழிலாளர் பிரிவிற்கு கண்ணியம், பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை வழங்கப்படும்.





# முக்கிய வாக்குறுதிகள்

## 20

நம்பகமான பொதுச் சுகாதாரச் சேவையை உறுதி செய்ய, பின்வருவனவற்றின் மூலம் தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்ட அரசு மருத்துவமனையையும் நாங்கள் முழுமையாக மேம்படுத்துவோம்:

a. கூடுதலாக **மூன்று ஆம்புலன்ஸ்** வாகனங்கள் ஒவ்வொரு மாவட்ட மருத்துவமனைக்கும் வழங்கப்படும்.

b. ஒரு **'சூப்பர் ஸ்பெஷாலிட்டி'** (உயர்தர சிறப்புச் சிகிச்சை) பிரிவு நிறுவப்படும்

c. அனைவருக்குமான **இலவச 'டயாலிசிஸ்' (Dialysis) மையங்கள்** ஒவ்வொரு மாவட்ட மருத்துவமனையிலும் ஒன்று நிறுவப்படும்.

d. ஒவ்வொரு மாவட்ட மருத்துவமனையிலும் ஒரு **போதை மீட்பு மற்றும் மறுவாழ்வு மையம்** நிறுவப்படும்.

e. அதிநவீன வசதிகளுடன் கூடிய 4 படுக்கைகள் கொண்ட **தீவிர சிகிச்சைப் பிரிவுகள்** (ICU) உருவாக்கப்படும்.

f. முழுமையாக இயங்கும் **நவீன அறுவை சிகிச்சை அரங்குகள்** (Operation Theatres) அமைக்கப்படும்.

g. **முதியோர் நலவாழ்வு மையம்** நிறுவப்படும்.

h. அதிநவீன வசதிகள் கொண்ட **10 படுக்கைகள் உடைய குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவுகள்** (PICU) உருவாக்கப்படும்.

i. தாய்மார்களுக்கான பிரத்யேக **'தாய்ப்பால் வங்கிகள்'** (Mother's Milk Banks) நிறுவப்படும்.





# முக்கிய வாக்குறுதிகள்

**21**

தமிழகத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நம்பகமான மற்றும் விரிவான மருத்துவச் சேவை கிடைப்பதை உறுதி செய்யவும், அதே வேளையில் போதைப் பழக்கம், முதியோர் நலன் மற்றும் அவசர சிகிச்சை போன்ற சவால்களுக்குத் தீர்வு காணவும், மாநிலத்தின் சுகாதாரக் கட்டமைப்பைப் பின்வரும் நடவடிக்கைகளின் மூலம் நாங்கள் வலுப்படுத்துவோம்:

a. 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய முதியவர்கள் அனைவருக்கும், நோய் கண்டறிதல் மற்றும் மேல்சிகிச்சை ஆலோசனைகள் உள்ளிட்ட **'முழுமையான வருடாந்திர வீட்டு மருத்துவப் பரிசோதனையை'** அவர்களின் இல்லத்திற்கே சென்று வழங்குவோம்.

b. ஒவ்வொரு மாவட்டத்திலும் 'முழுமையான போதை மீட்பு மற்றும் மறுவாழ்வு மையங்களை' உறுதி செய்யும் வகையில் ஒரு **'மீட்பு இயக்கம்'** (Recovery Mission) தொடங்கப்படும்.

c. **மதுரை எய்ம்ஸ் (AIIMS) மருத்துவமனைக்** கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்தி முழுமையாக முடிப்போம்.

d. **கிழக்கு கடற்கரை சாலையில் (ECR) 'அதிநவீன விபத்து சிகிச்சை மையம்'** (State-of-the-art Trauma Care Centre) நிறுவப்படும்.

e. மலைப்பகுதிகள், தொலைதூர மற்றும் அணுக முடியாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு உரிய நேரத்தில் மருத்துவ உதவி கிடைப்பதை உறுதி செய்ய, **இருசக்கர வாகன ஆம்புலன்ஸ்களின்** (Motor Bike Ambulances) எண்ணிக்கை **25-லிருந்து 50-ஆக உயர்த்தப்படும்**. இதில் தமிழகத்தின் கொங்குப் பகுதிக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

f. அரிய வகை நோய்களால் ஏற்படும் **நிதி நெருக்கடியிலிருந்து தமிழகக் குடும்பங்களைப் பாதுகாக்க 100 கோடி ரூபாய்** பிரத்யேகமாக ஒதுக்கப்படும்.





# முக்கிய வாக்குறுதிகள்

22

தமிழகம் போன்ற புவியியல் ரீதியாக பன்முகத்தன்மை கொண்ட ஒரு மாநிலத்திற்கு, வளர்ச்சியின் இயந்திரமாகச் செயல்படக்கூடிய நவீன மற்றும் எதிர்கால உள்கட்டமைப்பு அவசியமாகும். இதற்காக, தற்போதைய மாநில அரசால் ஏற்பட்டுள்ள தடைகளை அகற்றி மாநிலம் முழுவதும் நிலுவையில் உள்ள முக்கிய இரயில்வே திட்டங்களை முடிக்க, நிலத்தை நியாயமான விலையில் கையகப்படுத்துவதை உறுதி செய்வோம். மத்திய அரசுடன் இணைந்து, பின்வரும் திட்டங்களின் மூலம் **தமிழகத்தின் இரயில் இணைப்பை விரிவுபடுத்துவோம்**:

a. **சென்னை - பெங்களூரு** மற்றும் **சென்னை - ஹைதராபாத்** இடையே **அதிவேக இரயில் வழித்தடங்கள்** (High Speed Rail Corridors).

b. கொங்கு மண்டலத்தில் **கோவை - திருப்பூர் - ஈரோடு - சேலம்** வழித்தடத்தை இணைக்கும் **பிராந்திய அதிவேக போக்குவரத்து அமைப்பு** (RRTS).

c. விழுப்புரம் - சென்னை இடையே **பிரத்யேக சிறு-நகர்ப்புற இரயில் சேவை** (Semi-Urban Rail).

d. தமிழகத்தில் **ஹைட்ரோ பவர் ரயில்** திட்டம் (Hydro Power Train).

e. மத்திய அரசின் தொலைநோக்கு முயற்சியான புதிய **படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத்** (Sleeper Vande Bharat) இரயில்களை **சென்னை - மும்பை, சென்னை - கொல்கத்தா மற்றும் சென்னை - டெல்லி** உள்ளிட்ட முக்கிய வழித்தடங்களில் அறிமுகப்படுத்துதல்

f. தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் காரைக்கால் ஆகியவற்றை இணைக்கும் **மயிலாடுதுறை - காரைக்கால் இரயில் பாதையை சீரமைப்போம்**





# முக்கிய வாக்குறுதிகள்

**23**

தமிழ்நாட்டு இளைஞர்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு, நவீன காலத் தொழில்நுட்பங்கள் குறித்த பாடத்திட்டங்களை வழங்கும் **தமிழ்நாடு மாநில திறன் மேம்பாட்டுப் பல்கலைக்கழகத்தை** நிறுவி, மாநிலத்தின் அனைத்து மண்டலங்களிலும் அதன் வளாகங்களை அமைப்போம்.



# முக்கிய வாக்குறுதிகள்



24

தமிழ்நாட்டை இந்தியாவின் உவர்நீர் சுத்திகரிப்புத் தலைநகரமாக (Desalination Capital) மாற்றி, குறிப்பாக தெற்கு மற்றும் டெல்டா மாவட்டங்களில் குடிநீர் பற்றாக்குறையை முற்றிலுமாகத் தீர்ப்போம். இதற்காக:

a. வளைய முதன்மைக் குழாய் மற்றும் அழுத்தம்கூட்டப்பட்ட வலையமைப்புகள் மூலம் அனைத்து நீர் ஆதாரங்களையும் இணைப்போம்.

b. 500 MLD அளவுக்கு கூடுதல் குடிநீர் வழங்கும் புதிய உவர்நீர் சுத்திகரிப்பு ஆலைகள் நிறுவப்படும்.

c. செயல்படக்கூடிய முன்மாதிரி மையத்துடன் கூடிய தமிழ்நாட்டின் முதல் உவர்நீர் சுத்திகரிப்பு ஆராய்ச்சி மையம் கடலூர் மாவட்டத்தில் அமைக்கப்படும்.

25



தற்போதைய திமுக ஆட்சியில் அதிகரித்துள்ள மின்சார கட்டணச் சுமையிலிருந்து குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கவும், நீண்டகால மின் செலவுகளைக் குறைக்கவும், வீட்டுக் கூரையில் சூரிய மின் உற்பத்தியை விரைவுபடுத்தவும் பி.எம். சூர்ய கர் முஃப்த் பிஜ்லி யோஜனா திட்டத்தில் (பிரதமரின் சூரிய சக்தி வீடு, இலவச மின்சாரத் திட்டம்) விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பயனாளிக்கும் மத்திய அரசின் ஊக்கத்தொகைக்கு மேல் அதிகமாக ₹25,000 மாநில சிறப்பு நிதியுதவி வழங்கப்படும்.



# முக்கிய வாக்குறுதிகள்

**26**

நமது மாநிலத்தின் ஒவ்வொரு மூலையையும் பொருளாதார இயந்திரமாக மாற்றி, நமது நிலப்பரப்பு மற்றும் பாரம்பரியத்தின் ஆழத்தைக் கொண்டாடுவோம். இதற்காகப் பின்வரும் கருப்பொருள் சார்ந்த சிறப்பு சுற்றுலாத் திட்டங்களை உருவாக்கி, தமிழகத்தில் ஆண்டு முழுவதிற்குமான சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்துவோம்:


a. **கடல் சுற்றுலா:** கப்பல் பயணம், நீர் விளையாட்டுகள் மற்றும் கடல்சார் பொழுதுபோக்கு நடவடிக்கைகளை உள்ளடக்கிய கடற்கரை சுற்றுலா.

b. **மலை சுற்றுலா:** நடைபயணப் பாதைகள், காபி-தேயிலை தோட்ட சுற்றுலாக்கள் மற்றும் டோடா & படகா பழங்குடியினக் பாரம்பரியங்களின் ஆழமான அனுபவங்கள் வழியாக மலை சார்ந்த பகுதிகளுக்கான சுற்றுலாவை மேம்படுத்துவோம்.

c. **வனச் சுற்றுலா:** காட்டுப் பயணங்கள் (Jungle Safaris), பறவைகள் சரணாலயங்கள் மற்றும் தேசியப் பூங்காக்களுக்கு வழி வகை செய்யும் வனச் சுற்றுலா.


d. **பிரத்யேக ஆன்மிகச் சுற்றுலா:** கோவில் சுற்றுலாக்களை அடிப்படையாகக் கொண்ட பாரம்பரிய சுற்றுலாக்கள்.

e. **கலாச்சார சுற்றுலா:** தமிழகத்தின் செழுமையான மரபுகள், சிறு தெய்வங்கள் மற்றும் நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் விதமாக **“தமிழக கிராம தெய்வங்கள் சங்கமம்”** என்ற பிரம்மாண்ட நிகழ்ச்சிகள் இந்தியாவின் முக்கிய நகரங்களில் நடத்தப்படும்.





# முக்கிய வாக்குறுதிகள்




27

தென் தமிழகத்தின் ஆன்மீக மற்றும் பொருளாதார வளர்ச்சியினை மீட்டெடுக்கும் வகையில், பிரத்யேகத் **“தென் தமிழகத் திருத்தல யாத்திரை”** திட்டத்தை உருவாக்குவோம். உள்கட்டமைப்பை மேம்படுத்துவதோடு, தென் மாவட்டங்களில் பக்தர்களின் பயண அனுபவத்தையும் மேம்படுத்தி, அப்பகுதியின் செழுமையான கலாச்சாரப் பாரம்பரியத்தை முன்னெடுப்போம்.



# நிர்வாகம் மற்றும் சட்டம் & ஒழுங்கு



## சீராகும் சட்டம் ஒழுங்கு, அறம் காக்கும் ஆட்சி

**வளமான வாழ்விற்குப் பாதுகாப்பான சமூகமே அடிப்படை; அதுவே ஒவ்வொரு குடிமகனும் அச்சமின்றி வாழவும், உழைக்கவும், கனவுகளை நனவாக்கவும் வழிவகுக்கும். பெண்களின் பாதுகாப்பு, இளைஞர்களின் நல்வாழ்வு மற்றும் நிர்வாகத்தின் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை முன்னிறுத்தும் வலுவான சட்டம் ஒழுங்குக் கட்டமைப்பு இல்லாமல் உண்மையான முன்னேற்றம் சாத்தியமில்லை. குற்றப்பின்னணி கொண்ட கும்பல்களை வேரறுப்பதன் மூலமும், நமது சட்ட நடைமுறைகளை நவீனப்படுத்துவதன் மூலமும், பாரதிய ஜனதா கட்சி சட்டத்தின் ஆட்சியை மீண்டும் நிலைநாட்ட உறுதியளிக்கிறது. இது ஏழை எளியோருக்குக் கேடயமாகவும், சட்டத்தை மீறுவோருக்கு ஒரு எச்சரிக்கையாகவும் அமையும்.**

1. தற்போதைய மாநில அரசின் கீழ் வேரூன்றியுள்ள போதைப்பொருள் புழக்கத்தை அறவே ஒழிக்க, எவ்வித சமரசமுமற்ற, மிகக் கடுமையான (Zero-tolerance) ஆட்சியை நாங்கள் உறுதி செய்வோம். தீர்க்கமான மற்றும் சமரசமற்ற நடவடிக்கைகள் மூலம் **'போதைப்பொருள் இல்லாத தமிழகத்தை'** உருவாக்குவோம்:
   a. அமலாக்கம், விசாரணை மற்றும் விழிப்புணர்வு ஆகியவற்றை மேற்கொள்ள, **'தமிழ்நாடு போதைப்பொருள் ஒழிப்புத் துறை'** (TN-DED) என்ற தனிப்பிரிவு உருவாக்கப்படும். போதைப்பொருள் கடத்தல் மற்றும் பயன்பாட்டைத் தடுக்க, முழு தன்னாட்சியுடன் செயல்படும் இந்தச் சிறப்புப் படை, குற்றவாளிகளுக்கு ஒரு சிம்ம சொப்பனமாகவும், போதைப்பொருள் புழக்கத்திற்கு ஒரு முற்றுப்புள்ளியாகவும் அமையும்.
   b. கடல் வழியாக நடைபெறும் போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க, இந்தியக் கடலோரக் காவல்படை மற்றும் மாநிலக் காவல்துறையுடன் இணைந்து செயல்படும் வகையில், **'போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவு'** ஒன்று பிரத்யேகமாக நிறுவப்படும். மேலும், ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், காலதாமதமின்றி போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, தமிழகத்தை **'கஞ்சா இல்லாத மாநிலமாக'** மாற்றுவோம்.

c. போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டுகள் மற்றும் சட்டவிரோதச் செயல்பாடுகளைத் தெரிவிக்க, பிரத்யேக **'உதவி எண்'** அறிமுகப்படுத்தப்படும். பெறப்படும் ஒவ்வொரு புகாரின் மீதும் மின்னல் வேக நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, அது குறித்த தொடர் விசாரணையும் அதிகாரிகளின் பொறுப்புடைமையும் உறுதி செய்யப்படும்.

2. போதைப்பொருள் தொடர்பான வழக்குகளை அதிவிரைவாக விசாரித்து தண்டனை வழங்க, **'சிறப்பு விரைவு நீதிமன்றங்கள்'** அமைக்கப்படும். **மீண்டும் மீண்டும் குற்றம் புரிவோருக்கும், போதைப்பொருள் மாஃபியா கும்பல்களுக்கும் NDPS சட்டத்தின் வரம்புகளுக்கு உட்பட்டு 'மரண தண்டனை'** பெற்றுத் தருவது உறுதி செய்யப்படும். இது பெருமளவிலான போதைப்பொருள் கடத்தலை அடியோடு ஒழிப்பதற்கான ஒரு கடுமையான எச்சரிக்கையாகவும், நமது இளைஞர்களைக் காத்து, குடும்பங்களின் பாதுகாப்பை உறுதி செய்து, வருங்காலச் சந்ததியினருக்கு ஒரு பாதுகாப்பான சமூகத்தை அமைத்துத் தரும் அரணாகவும் விளங்கும்.

3. அனைத்துப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் **'போதைப்பொருள் இல்லாத வளாகங்களாக'** மாற்ற கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். தீவிர கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்கள் மூலம் இளைஞர்களைப் பாதுகாப்பதோடு, அவர்களது கல்வி தடைபடாமல் தொடர்வது உறுதி செய்யப்படும். தற்போதைய மாநில அரசின் கீழ் பெருக்கெடுத்திருக்கும் போதைப்பொருள் புழக்கத்திலிருந்து நம் இளைஞர்களை விடுவித்து, அவர்களின் ஒளிமயமான எதிர்காலத்தை உறுதி செய்ய நமது அரசு அரணாக நிற்கும்.

4. போதைப்பொருள் புழக்கமானது மக்களை அடிமையாக்குவதோடு மட்டும் நிற்காமல், தமிழகம் முழுவதுமுள்ள நமது பெண்களின் பாதுகாப்பிற்கே சவாலாக மாறியுள்ளது. போதைப்பொருள் புழகத்தையும், அதனால் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களையும் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குவதற்கு, நமது அரசு பின்வருவனவற்றை உறுதி செய்யும்:

   a. குற்றங்களைப் பதிவு செய்யும் நடைமுறைகளை எளிமைப்படுத்த, உரிய காலத்தில் **குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுவதும், 'ஜீரோ-எப்.ஐ.ஆர்' (Zero-FIR) முறையும் நிலைநாட்டப்படும்.**



b. நீதி வழங்கும் நடைமுறையில், **சாட்சியாளர்களுக்கும் பாதிக்கப்பட்டோருக்கும் முழுமையான பாதுகாப்பு** உறுதி செய்யப்படும்.

c. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் (POCSO) உள்ளிட்ட கொடூர குற்றங்களுக்கு விரைந்து நீதி வழங்க, **'சிறப்பு விரைவு நீதிமன்றங்கள்'** நிறுவப்படும்.

d. அனைத்து பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் சிசிடிவி (CCTV) கண்காணிப்பை ஆய்வு செய்வதுடன், பேருந்துகளில் **100% சிசிடிவி கண்காணிப்பு** இருப்பதை உறுதி செய்வோம்.

e. மத்திய அரசின் **'நிர்பயா நிதி'** சிறந்த முறையில் முழுமையாகப் பயன்படுத்துவது உறுதி செய்யப்படும்.

5. பல்கலைக்கழகங்களில் **'ராணி வேலு நாச்சியார் பெண்கள் கண்காணிப்புப் பிரிவுகள்'** நிறுவப்படும். மேலும், பிரத்யேகக் காவல்துறை சாவடிகள் அமைக்கப்படுவதோடு, பாலியல் தொல்லைகளுக்கு எதிராக உடனடி நடவடிக்கையும் சமரசமற்ற தீர்வையும் உறுதி செய்ய, காலக்கெடுவுடன் கூடிய விசாரணைகளை மேற்கொள்ளும் **'உள் புகார்கள் குழு'** (Internal Complaints Committee) கட்டாயமாக்கப்படும்.



6. மகளிர் சுய உதவிக்குழுக்களுடன் (SHG) ஒருங்கிணைந்து செயல்படும் **'மாவட்ட அளவிலான கள்ளச்சாராய ஒழிப்புச் சிறப்புப் பிரிவுகள்'** (Special Illicit Liquor Suppression Units) பிரத்யேகப் புலனாய்வு மற்றும் நிதி விசாரணைப் பிரிவுகளுடன் உருவாக்கப்படும். சாராய மாஃபியாக்களின் பிடியை அடியோடு தகர்ப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். மதுப் பழக்கத்திற்கு ஆளானவர்களால் பெண்கள் நேரடியாகப் பாதிக்கப்படுவதையும், குடும்பங்களின் வாழ்வாதாரம் சிதைவதையும் கருத்தில் கொண்டு, இந்த மாற்றத்தை முன்னின்று வழிநடத்தப் பெண்களுக்கு உரிய அதிகாரம் வழங்கப்படும்.

7. திமுக ஆட்சியில் தமிழகத்தின் பாதுகாப்புக் கேடயமான காவல்துறையே பலவீனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனைச் சீரமைக்க, நவீனப் பயிற்சி, மக்களுடன் இணைந்த முன்னெடுப்புகள் மற்றும் கான்ஸ்டபிள் வரை அனைத்துக் காவல்துறைப் பணியாளர்களுக்கும் வாராந்திரக் கட்டாய விடுமுறை உள்ளிட்ட **'காவல்துறை சீர்திருத்தங்கள்'** முன்னெடுக்கப்படும். மேலும், காலக்கெடுவுடன் கூடிய ஆள்சேர்ப்பு, காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புதல் மற்றும் களப்பணியாற்றும் காவலர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம், தற்போது **ஒரு லட்சம் பேருக்கு 159 ஆக உள்ள காவலர்களின் எண்ணிக்கையை 200-க்கும் மேலாக உயர்த்துவோம்.**

8. முதல் நிலையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட **90 நாட்களுக்குள் பட்டா தொடர்பான அனைத்துத் தகராறுகளும் தீர்க்கப்படுவது** உறுதி செய்யப்படும். நில உரிமையாளர்களின் பாதுகாப்பிற்காக, டிஜிட்டல் மயமாக்கப்பட்ட நிலப் பதிவேடுகள், அதிகாரம் அளிக்கப்பட்ட வருவாய் நீதிமன்றங்கள் மற்றும் காலக்கெடுவுடன் கூடிய குறைதீர்ப்பு நடவடிக்கைகள் மூலம் ஒவ்வொரு நில உரிமையாளரின் உரிமையும் உறுதி செய்யப்படும்.

9. அண்டை மாநிலங்களில் உள்ள திமுக கூட்டணிக் கட்சிகள் அரசின், மருத்துவமனைகள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் கழிவு மேலாண்மை அலகுகள் மூலம் நமது மாநில எல்லைகளில் சட்டவிரோதமாகக் கழிவுகளைக் கொட்டுவதைத் தடுக்காமல் மௌனம் காக்கின்றன. இச்செயல் நமது ஆறுகளையும் விளைநிலங்களையும் நஞ்சாக்கி, தமிழ் மக்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க, விதிமீறுபவர்கள் மீது கடுமையான அபராதம் விதித்தல், நவீன கண்காணிப்பு அமைப்புகள் மூலம் சமரசமற்ற கண்காணிப்பை உறுதி செய்தல் மற்றும் **குப்பைக் கொட்டுதலுக்கு எதிரான படைகள்** (Anti-dumping task forces) மூலம் விரைவான நடவடிக்கை எடுத்து சுற்றுசூழல் புனிதத்தைப் பாதுகாப்போம்.

10. திமுக ஆட்சியில் நிலவும் மிக மோசமான நிர்வாகச் சூழலால், தமிழகத்தில் வன்முறை தலைதூக்கியுள்ளது. மக்களின் உயிரைக் காக்கும் மருத்துவர்களும், சமூகத்தின் குரலாக ஒலிக்கும் ஊடகவியலாளர்களும் இன்று தங்கள் உயிருக்கு அச்சுறுத்தலான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்தச் சூழலை மாற்றியமைக்க, **மருத்துவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு வலிமையான சட்டப் பாதுகாப்பை உறுதி செய்வோம்**. மேலும், விரைவான நீதி வழங்குவதன் மூலம் வன்முறை மற்றும் மிரட்டல்களில் இருந்து அவர்களைப் பாதுகாக்கும் அரணாக நமது அரசு விளங்கும்.





# சமூக நீதி





# வறுமையற்ற தமிழகம்; வளர்ச்சியில் சமத்துவம்

**உண்மையான செழிப்பு என்பது கடைசி மனிதனின் கண்ணியத்தையும் நல்வாழ்வையும் உறுதி செய்வதற்கான அர்ப்பணிப்பைக் கொண்டே அளவிடப்படுகிறது. ஆனால், தமிழக மக்களுக்கு அது ஒரு எட்டாக்கனியாகவே இருப்பதை உறுதி செய்வதில் திமுக எந்த எல்லைக்கும் செல்லும். தகுதியற்ற இந்தக் குடும்ப அரசியல் செய்யும் ஆட்சியாளர்களால் இழைக்கப்பட்ட தவறுகளைச் சரிசெய்ய வேண்டிய தருணம் இது. அதற்காக, சமூகப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பான நிலையான வாழ்வாதாரத்துடன் கூடிய ஒருங்கிணைந்த நிதி உதவியை பாஜக உறுதி செய்யும். ஒவ்வொரு குடும்பமும் அதிகாரம் பெறும் வகையில் அனைவரையும் உள்ளடக்கிய தமிழ்நாட்டை உருவாக்குவதே பாஜக-வின் இலக்காகும். நமது தொழிலாளர்களையும் மாற்றுத்திறனாளிகளையும் கௌரவிப்பது முதல், முதியவர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது வரை, மாநில நலத்திட்டங்களை வாழ்நாள் பாதுகாப்பிற்கான ஒரு தூணாகவும், அனைவரையும் செழிப்படைய வைத்து, அதன் மூலம் நீதியுள்ள ஒரு சமுதாயத்தை அமைப்பதே எங்கள் தொலைநோக்குப் பார்வையாகும்.**

1. தற்போதைய மாநில அரசின் கீழ், இடைவிடாத விலைவாசி உயர்வு, மின்சாரக் கட்டண உயர்வு மற்றும் கணிசமான சொத்து வரி உயர்வு ஆகியவற்றால் கட்டுக்கடங்காத பணவீக்கம் ஏற்பட்டுள்ளது. அதே சமயம் எவ்வித நிவாரணமுமின்றி தமிழகக் குடும்பங்களை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது. இதனைச் சரிசெய்ய, ஒவ்வொரு குடும்பத்திற்கும் **₹10,000 நிதியுதவியாக ஒருமுறை வழங்கப்படும்**. இந்த நடவடிக்கை உடனடி நிதி நிவாரணத்தை வழங்குவதோடு, குடும்பங்களின் பட்ஜெட்டுகளை நிலைப்படுத்தும். மேலும், தற்போதைய ஆட்சியாளர்களின் நிர்வாகத் திறனின்மையால் ஏற்பட்டுள்ள பொருளாதார பாதிப்புகளை எதிர்கொள்ள, உள்ளூர் நுகர்வையும் ஊக்குவிக்கும்.

2. தற்போதைய திமுக ஆட்சியில் அதிகரித்துள்ள மின்சார கட்டணச் சுமையிலிருந்து குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கவும், நீண்டகால மின் செலவுகளைக் குறைக்கவும், வீட்டுக் கூரையில் சூரிய மின் உற்பத்தியை விரைவுபடுத்தவும் **பி.எம். சூர்ய கர் முஃப்த் பிஜ்லி யோஜனா** திட்டத்தில் (பிரதமரின் சூரிய சக்தி வீடு, இலவச மின்சாரத் திட்டம்) விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பயனாளிக்கும் மத்திய அரசின் **ஊக்கத்தொகைக்கு மேல் அதிகமாக ₹25,000 மாநில சிறப்பு நிதியுதவி** வழங்கப்படும்.

3. வறுமையில் வாடும் ஆதரவற்ற நபர்களுக்குக் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்யும் வகையில் **ஒவ்வொரு மாவட்டத்திலும் இரவு தங்குமிட விடுதிகள் அமைக்கப்படும்**. அத்துடன் அவர்களை அடையாளம் காணும் சிறப்பு இயக்கங்கள் நடத்தப்படும், அடையாள அட்டைகள் வழங்கப்படும் மற்றும் பொருத்தமான சமூக நலத் திட்டங்களில் சேர்க்கை உறுதிசெய்யப்படும். இதன் மூலம் எவரும் ஆதரவின்றி தனிமையில் விடப்படமாட்டார்கள்.

4. சாதி ரீதியிலான மக்கள்தொகை கணக்கெடுப்பில் எங்களது உறுதிப்பாடானது, வெளிப்படையான மற்றும் தரவு சார்ந்த சமூக நீதியின் அடிப்படையில் வேரூன்றியுள்ளது. தமிழ்நாட்டில் ஒவ்வொரு சமூகத்திற்கும் நியாயமான வளங்களை ஒதுக்கீடு செய்யும் வகையிலும், இலக்கு நிர்ணயிக்கப்பட்ட முன்னேற்றம் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதிசெய்யும் வகையிலும், மத்திய அரசின் **சாதி ரீதியிலான மக்கள்தொகை கணக்கெடுப்பிற்கு** நாங்கள் முழுமையான ஆதரவை வழங்குவோம்.

5. மக்களைச் சுரண்டுவதிலும் தங்கள் சொந்த கஜானாக்களை நிரப்பிக்கொள்வதிலும் மட்டுமே அக்கறை கொண்ட தற்போதைய மாநில அரசின் அலட்சிய ஆட்சியால், இறந்தவர்களுக்கான இறுதிச் சடங்கை மரியாதையுடன் செய்யும் உரிமை கூட தமிழக மக்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது. இதனை சரிசெய்யும் வகையில், வறுமை கோட்டிற்குக் கீழ் உள்ள (BPL) குடும்பங்களுக்கு **இறந்தவர்களுக்கான இறுதிச் சடங்கை மரியாதையுடன் செய்யும் உரிமையை** உறுதிப்படுத்துவோம். மேலும், இறுதிச் சடங்கு செலவுகளுக்காக **₹10,000 நிதியுதவியையும்** வழங்குவோம்.

6. கோவில் அர்ச்சகர்கள், பூசாரிகள் மற்றும் கோவிலில் சேவை செய்யும் சமூகங்களைக் கௌரவிக்கும் வகையில், **விபத்துக்கான இழப்பீடு, ஆயுள் காப்பீடு மற்றும் முதியோர் ஓய்வூதியப் பாதுகாப்பு** ஆகியவற்றை உள்ளடக்கிய சிறப்பு சமூகப் பாதுகாப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். மேலும், இந்தியா முழுவதும் உள்ள முக்கிய **ஆன்மிகத் தலங்களுக்குத் தீர்த்த யாத்திரைப் பயணங்கள்** ஏற்பாடு செய்யப்படும். இதன் மூலம் அவர்களது மரியாதையும் நலனும் உறுதிசெய்யப்படும்.



7. உள்நாட்டில் உற்பத்தியாகும் இரசாயனமற்ற வெல்லத்தைக் கட்டாயமாகச் சேர்க்க வலியுறுத்துவதன் மூலம் விவசாயிகளையும் ஆரோக்கியமான உள்ளூர் விளைபொருட்களையும் ஊக்குவிப்போம். இது ஊட்டச்சத்தை மேம்படுத்துவதோடு, நிலையான விவசாயம் மற்றும் கிராமப்புற வாழ்வாதாரங்களையும் பலப்படுத்தும். இதற்காகப் பின்வருவனவற்றை வழங்குவோம்:

   a. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள (BPL) அனைத்துக் குடும்பங்களுக்கும் நியாய விலைக் கடைகள் மூலமாக **மாதந்தோறும் 250 கிராம் வெல்லம்**

   b. அனைத்துக் குடும்பங்களுக்கும் ஆண்டுதோறும் வழங்கப்படும் **பொங்கல் பரிசுத் தொகுப்பில் கூடுதலாக 250 கிராம் வெல்லம்**

8. தமிழ்நாட்டின் தற்போதைய மாநில அரசு **கிக் தொழிலாளர்களைக் கைவிட்டுள்ளது**. அதிகரித்து வரும் அபாயங்களுக்கு மத்தியில் அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு, நியாயமான மானியங்கள் அல்லது காப்பீடு எதுவும் இல்லாமல் பாதிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். எனினும், பொருளாதாரத்திற்கு மட்டுமின்றி சமூகத்தின் வசதிகளுக்கும் கிக் தொழிலாளர்களின் பங்களிப்பை பாஜக அங்கீகரித்து, அவர்களது சமூகப் பாதுகாப்பைப் பின்வரும் வழிகளில் வலுப்படுத்தும்:

   a. அனைத்து கிக் தொழிலாளர்களுக்கும் மத்திய அரசின் முக்கிய திட்டமான **ஸ்ரம் யோகி மான்தன் திட்டத்தின்** (பிரதமரின் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்) கீழ் **இ-ஸ்ரம் போர்ட்டலில் 100% பதிவை உறுதிசெய்வோம்**.

   b. ஒவ்வொரு கிக் தொழிலாளருக்கும் **மாதந்தோறும் ₹1,500 வரையறையுடன்** மின்சார வாகன சார்ஜிங் / எரிபொருள் மானியம் வழங்கப்படும். மேலும், ISI சான்றிதழ் பெற்ற தலைக்கவசங்கள், பிரதிபலிப்பு ஜாக்கெட்டுகள் மற்றும் முதலுதவி கருவிகளுடன் கூடிய பாதுகாப்பு கிட் (Safety Kit) ஒருமுறை வழங்கப்படும்.



c. அனைத்து கிக் தொழிலாளர்களுக்கும் விபத்து காப்பீட்டுத் தொகையை **₹5 லட்சத்திலிருந்து ₹10 லட்சமாக** இரட்டிப்பாக்குவோம். இதன் மூலம் இந்த முக்கியமான தொழிலாளர் பிரிவிற்கு கண்ணியம், பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை வழங்கப்படும்.

9. மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான மாநில அளவிலான ஆதரவும் உத்தரவாதமும், தமிழகத்தில் தற்போதைய அரசால் மறுக்கப்பட்டுள்ளது. ஆனால், எங்களது வாக்குறுதிகள் வாக்குகளுக்கானதல்ல, மாறாக ஆர்வமுடன் சேவை செய்ய விரும்பும் மக்களின் ஆசீர்வாதத்திற்கு உரியதாகும். எனவே, **அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற நோக்கத்துடன் மாற்றுத்திறனாளிகளை மேம்படுத்த**, பின்வருவனவற்றை உறுதிசெய்வோம்:

   a. மாநிலப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் **மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர ஓய்வூதியத்தை ₹1,500-லிருந்து ₹3,000 ஆக இரட்டிப்பாக்குவோம்.**

   b. மத்திய அரசின் முன்னோடித் திட்டமான **பி.எம். திவ்யாஷா கேந்திராவை** உறுதியாகச் செயல்படுத்தி, மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்கள், உதவி சாதனங்களை எளிதாகப் பெறுவதற்கு உதவி தொழில்நுட்ப மார்ட்டுகளை (Assistive Technology Marts) நிறுவுவோம்

   c. மாற்றுத்திறன் கொண்ட இளைஞர்களுக்குத் தகவல் தொழில்நுட்பம், AVGC, விருந்தோம்பல் மற்றும் உணவு & பானச் சேவைகளில் **தொழில்துறை சார்ந்த பயிற்சி வழங்கும் திட்டத்தைத்** தொடங்குவோம்.

10. தற்போதைய அரசால் முடக்கப்பட்டுள்ள மத்திய அரசின் முக்கிய திட்டமான **'பிரதமர் ஆவாஸ் யோஜனா'** (நகர்ப்புறம்/கிராமப்புறம்) திட்டத்தின் கீழ், ஏழை எளிய மக்களுக்கான வீடுகள் கட்டும் பணியை விரைவுபடுத்துவோம்.

11. மத்திய அரசின் முக்கிய திட்டமான **'பிரதமரின் விஸ்வகர்மா'** (PM Vishwakarma) திட்டத்தின் கீழ், தமிழகத்தின் தகுதியுள்ள அனைத்துக் கைவினைஞர்களுக்கும் 100% பயன்கள் கிடைப்பதை உறுதி செய்வோம். அவர்களுக்குத் தேவையான நவீனக் கருவிகள், முறையான பயிற்சி மற்றும் புதிய வாய்ப்புகள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம், இன்றைய நவீனப் பொருளாதாரச் சூழலில் அவர்கள் வெற்றியாளர்களாகத் திகழ நாங்கள் உறுதுணையாக இருப்போம்.







# மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாடு

# வாக்குறுதிகள்



## பெண்மையைப் போற்றுவோம், தலைமுறை காப்போம்

**வளமான குடும்பங்களையும் சமூகங்களையும் உருவாக்கும் திறன் கொண்டவர்கள் பெண்கள். உறுதியான மனபலம், புதிய சிந்தனை மற்றும் தளராத வலிமை ஆகியவற்றின் மூலம், அவர்கள் நாளைய எதிர்காலத்தை வடிவமைக்கிறார்கள். பெண்கள் முன்னேற்றத்தின் உணர்வை முன்னிறுத்தும் வகையில், திமுக-வின் அலட்சிய ஆட்சியால் உருவான அவலங்களைத் தாண்டி தமிழ்நாட்டுப் பெண்கள் ஒளிர்ந்து எழும்படி, அவர்களுக்கு நிதியுதவி, திறன் வளர்ப்புக்கான திட்டங்கள் மற்றும் எல்லோரையும் உள்ளடக்கிய வாய்ப்புகளை வழங்கி, அவர்களைத் தன்னம்பிக்கையுடன் தங்களைத் தாங்களே நிலைநிறுத்தக் கூடியவர்களாக மாற்றுவதை பாஜக உறுதி செய்யும்.**

1. தமிழகக் குடும்பத் தலைவிகள் அனைவருக்கும் **மாதம் ₹2,000 உதவித்தொகை** வழங்குவோம். குடும்பங்களை வலுப்படுத்துவதில் அவர்களின் முக்கிய பங்கினை அங்கீகரித்து, அவர்களுக்கு இன்றியமையாத பொருளாதார உதவியை இதன் மூலம் வழங்குவதே எங்களின் நோக்கம்
2. திமுக ஆட்சியில் விலைவாசி உயர்வால் அவதிப்படும் தமிழகப் பெண்களின் சுமையைக் குறைக்கும் வகையில், ஆண்டுக்கு **3 விலையில்லா கேஸ் சிலிண்டர்கள்** வழங்கப்படும். அவை பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தீபாவளி ஆகிய பண்டிகைக் காலங்களில் வழங்கப்படும். இதன் மூலம் தமிழகப் பெண்கள் ஒவ்வொரு பண்டிகையையும் எவ்விதச் சிரமமுமின்றி மிகுந்த மரியாதையுடன் கொண்டாடுவது உறுதி செய்யப்படும்.
3. பெண்களின் போக்குவரத்துச் சுதந்திரத்தை உறுதி செய்யவும், உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளைத் தடையின்றி அணுகவும், தகுதியுள்ள பெண்களுக்கு மின்சார இருசக்கர வாகனங்கள் (E-scooters) வாங்க **₹25,000 மானியம்** வழங்கப்படும். இதன் மூலம் நமது பெண்கள் தடையின்றிப் பயணித்து, சிறந்த கல்வி மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளைக் கண்டறிந்து முன்னேற வழிவகை செய்யப்படும்.
4. மகளிர் கூட்டுறவு சங்கங்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் (SHGs) மற்றும் சிறு, குறு, நடுத்தரத் தொழில்களை (MSMEs) வலுப்படுத்த பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்துவோம்:

a. பல்வேறு துறைகளில் உற்பத்தி ஆலைகளை நிறுவுவதற்காக, **₹50 லட்சம் வரை வட்டி இல்லாக் கடன்** வழங்கப்படும்.

b. அரசுக் கொள்முதலில், பெண்கள் நடத்தும் வணிக நிறுவனங்களுக்கு **20% இடஒதுக்கீடு** கட்டாயமாக்கப்படும்.

5. குடும்பங்கள் எதிர்கொள்ளும் பொருளாதாரச் சுமையைக் குறைக்கவும், பெண்கள் சொத்துரிமை பெறுவதை ஊக்குவிக்கவும், **முதன்முறையாக வீடு வாங்கும் பெண்களுக்கு முத்திரைக் கட்டணம்** (Stamp Duty) **3 சதவீதமாகக் குறைக்கப்படும்**.

6. பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் சாதனைப் பெண்களை அங்கீகரிக்கும் வகையில், மாநில அளவில் **'வெற்றி மகளிர் விருது'** வழங்கப்படும். இவ்விருது **₹5 லட்சம் ரொக்கப் பரிசுடன்** வழங்கப்படும். இது சாதனைப் பெண்களின் மாண்பினைப் போற்றுவதோடு, இளைய தலைமுறைப் பெண்களுக்குத் தங்களின் கனவுகளை எட்டிப்பிடிப்பதற்கான உந்துதலையும் வழங்கும்.

7. பெண்களிடையே அதிகரித்து வரும் மார்பகப் புற்றுநோய் மற்றும் கருப்பை வாய்ப் புற்றுநோய் பாதிப்புகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து குணப்படுத்த அனைத்துப் பெண்களுக்கும் **'இலவச மருத்துவப் பரிசோதனை'** செய்யப்படும். இதன் மூலம் பெண்களுக்கான சுகாதாரக் கட்டமைப்பில் உள்ள குறைபாடுகள் நீக்கப்பட்டு, அவர்களின் ஆரோக்கியம் உறுதி செய்யப்படும்.

8. சொத்து பரிமாற்றச் செலவுகளைக் குறைத்து, நடுத்தரக் குடும்பங்களின் நிதிச் சுமையை இலகுவாக்கும் வகையில், ₹10 லட்சத்திற்கும் குறைவான மதிப்புள்ள சொத்துகளுக்கான **'செட்டில்மென்ட்' (Settlement Deed) பத்திரப் பதிவு கட்டணம் முழுமையாக ரத்து செய்யப்படும்**.

9. மத்திய அரசின் முக்கிய திட்டமான **'லாக்பதி தீதீ'** மூலம் தமிழகத்தில் **20 லட்சம் 'லட்சாதிபதி லட்சுமிகளை'** உருவாக்குவதை இலக்காகக் கொண்டு, ட்ரோன் தீதீ, மஹிளா கிசான் சஷக்திகரன் பரியோஜனா, முத்ரா யோஜனா மற்றும் NRLM/NULM போன்ற திட்டங்களை விரிவுபடுத்துவதன் மூலம் பெண்களின் பொருளாதார நிலையில் ஒரு மாபெரும் எழுச்சியை ஏற்படுத்துவோம்.

10. மத்திய அரசின் முதன்மைத் திட்டமான **சகி நிவாஸின் (Sakhi Niwas)** கீழ், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மாணவிகளுக்கான விடுதிகள் அமைக்கப்படுவதை உறுதி செய்வோம். மேலும், பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பு மற்றும் தங்கும் வசதி சார்ந்த



சவால்களைத் தீர்க்கும் வகையில், முதலாம் மற்றும் இரண்டாம் நிலை நகரங்கள் (Tier-1, Tier-2 cities) மற்றும் அதிகப் பொருளாதாரச் செயல்பாடுகள் கொண்ட **பகுதிகளில் பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள்** விரிவுபடுத்தப்பட்டு, நவீன வசதிகளுடன் தரம் உயர்த்தப்படும்.

11. குழந்தைகளின் ஆரம்பகால பராமரிப்பை மேம்படுத்தவும், வேலைக்குச் செல்லும் தாய்மார்களுக்கு உறுதுணையாக இருக்கவும், மத்திய அரசின் முக்கிய திட்டத்தின் கீழ் தற்போதுள்ள அங்கன்வாடிகள் அனைத்தும் நவீன வசதிகளுடன் கூடிய **'சக்ஷம் அங்கன்வாடிகளாக' (Saksham Anganwadis)** தரம் உயர்த்தப்படும்.

12. மத்திய அரசின் முக்கிய திட்டமான **'பி.எம்-வாணி' (PM-WANI)** பொது வைஃபை (Wi-Fi) கட்டமைப்பைப் பயன்படுத்தி, மகளிர் சுயஉதவிக் குழுக்களின் டிஜிட்டல் பயன்பாட்டை விரிவுபடுத்தும் புதிய திட்டம் தொடங்கப்படும். தற்போதைய ஆட்சியால் அலட்சியப்படுத்தப்பட்டுள்ள டிஜிட்டல் இடைவெளியைக் குறைக்கும் வகையில், இக்குழுக்களுக்கு மாதம் **100 GB தரவுடன் கூடிய அதிவேக இணைய வசதி இலவசமாக** வழங்கப்படும்.

13. மத்திய அரசின் முக்கிய திட்டமான **'போஷன் அபியான்' (Poshan Abhiyaan)** திட்டத்தின் கீழ், ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் ரத்தசோகை ஆகிய சவால்களைப் பின்வரும் போர் கால நடவடிக்கைகளின் மூலம் எதிர்கொள்வோம்:

    a. தமிழகம் முழுவதுமுள்ள பள்ளிகளில் ஊட்டச்சத்து மிக்க, சுகாதாரமான, அன்றாட **மதிய உணவு** தடையின்றி வழங்கப்படுவதை உறுதி செய்வோம்.

    b. ரத்தசோகை மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தேவையான **இரும்புச்சத்து மாத்திரைகள்** வழங்கப்படும்.

    c. உணவு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், மதிய உணவுத் திட்டத்தில் **சிறுதானிய உணவுகள்** இணைக்கப்படும்.





# இளைஞர்கள், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு

# வாக்குறுதிகள்



## இளைஞர் சக்தி; தமிழகத்தின் வெற்றி

**புத்தாக்கம், பொருளாதார வலிமை மற்றும் தேசிய முன்னேற்றத்தின் ஆற்றல்மிக்க இயந்திரங்களாக இருக்கும் நமது இளைஞர்கள், துணிச்சலான சிந்தனைகளுடனும், தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைமைத்துவத்துடனும் இந்தியாவை முன்னோக்கிச் செலுத்தி வருகின்றனர். இருப்பினும், தமிழக இளைஞர்களின் முன்னேற்றத்திற்கான வாய்ப்பு, திமுக ஆட்சியால் மிக நீண்ட காலமாகப் பறிக்கப்பட்டுள்ளது. அதை மாற்றி, தமிழக இளைஞர்களின் ஆற்றலைப் பயன்படுத்திக்கொள்ள அசைக்க முடியாத உறுதிமொழியைப் பாஜக எடுத்துள்ளது. இளைஞர்களை முன்னேற்றும் உத்வேகத்தில், திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் தொழில்முனைவோராகும் வாய்ப்புகள் மூலம் தமிழகத்தின் இளைஞர் சக்தி பெரும் உயரங்களை எட்டுவதை நாங்கள் உறுதி செய்வோம்.**

1. தமிழ்நாட்டு இளைஞர்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு, நவீன காலத் தொழில்நுட்பங்கள் குறித்த பாடத்திட்டங்களை வழங்கும் **தமிழ்நாடு மாநில திறன் மேம்பாட்டுப் பல்கலைக்கழகத்தை** நிறுவி, மாநிலத்தின் அனைத்து மண்டலங்களிலும் அதன் வளாகங்களை அமைப்போம்.
2. அளவற்ற ஆற்றலைத் தன்னகத்தே கொண்டுள்ள தமிழக இளைஞர்களைச் சரியான வாய்ப்புகள் மூலம் முன்னேற்றுவதே மாநிலத்தின் வளர்ச்சிக்கான திறவுகோல். இளம் ஆற்றலை ஒருங்கிணைத்து, வளர்ந்த தமிழகத்தை உருவாக்குவதோடு, ஒரு ஒளிமயமான எதிர்காலத்தைப் பின்வருவனவற்றின் மூலம் உறுதி செய்வோம்:
   a. முதல் தலைமுறை இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு மாணவர்களுக்கு **₹10 லட்சம் வரை வட்டியில்லா கல்விக்** கடன் வழங்கப்படும்.
   b. வேலைவாய்ப்பின்மை காரணமாக இ.எம்.ஐ (EMI) செலுத்த முடியாதவர்களுக்குக் **கல்விக்கடன் தள்ளுபடி** செய்யப்படும்.
   c. அரசுத் துறைகளில் அனைத்துப் பிரிவுகளிலும் உள்ள காலிப்பணியிடங்களை நேர்மையான மற்றும் வெளிப்படையான முறையில் நிரப்பும் வகையில் **1 லட்சம் இளைஞர்களுக்கு அறிவிப்பு அனுப்பி, பணியில் அமர்த்தப்படுவர்.**

3. தமிழக இளைஞர்களின் முழுத் திறனையும் வெளிக்கொணரவும், மாநிலத்தின் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கும் வகையில் அவர்களை வழிநடத்தவும், நாங்கள் மேற்கொள்ள உள்ள நடவடிக்கைகள்:

   a. முக்கிய திறன் குறைபாடுகளைக் கண்டறியவும், தொழில்துறை தேவைகளைப் பூர்த்தி செய்யும் தீர்வுகளை வடிவமைக்கவும், **தமிழகம் முழுவதும் திறன் கணக்கெடுப்பு நடத்தப்படும்**.

   b. நவீன உலகப் பொருளாதாரத்திற்குத் தேவையான தொழில்நுட்பத் திறன்களும் மென் திறன்களும் நமது இளைஞர்களிடம் இருப்பதை உறுதி செய்யும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் **தொழில்துறை சார்ந்த வேலைப் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை** வழங்குவோம்.

   c. தமிழகத்தில் மாவட்டந்தோறும் **ஒரு போட்டித் தேர்வுப் பயிற்சி மையம்** தொடங்கப்படும்.

   d. பொருளாதார நெருக்கடிகள் கல்வித் திறமையைப் பாதிக்காததை உறுதி செய்யும் வகையில் அரசுப் பணித் தேர்வுகளில் வெற்றிகரமாகத் தேர்ச்சி பெறும் பின்தங்கிய பின்னணியைச் சேர்ந்த மாணவர்களுக்கு **100% பயிற்சிக் கட்டணம் திரும்ப வழங்கப்படும்**.

4. முன்னாள் **அக்னிவீரர்களுக்கு** குரூப் சி (Group C) மற்றும் குரூப் டி (Group D) அரசு வேலைகளில் **5% இட ஒதுக்கீடு வழங்கப்படும்**. மேலும், தமிழ்நாட்டின் வீர இளைஞர்களுக்கு ஒழுக்கமான தலைமைத்துவம் கொண்ட புதிய சகாப்தத்தை தொடங்கும் வகையில் அக்னிபாத் ஆட்சேர்ப்பு திட்டத்தில் வெற்றிகரமாக தகுதி பெறுவதற்கான பயிற்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

5. இந்தியாவின் தொழில்நுட்பப் புரட்சியை வழிநடத்தவும், எதிர்காலத்திற்குத் தயாரான தமிழ்நாட்டைக் கட்டமைக்கவும், 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அதிநவீன திறன்களையும், செயல்முறைப் புத்தாக்கங்களையும் அளித்து அவர்களை எதிர்காலத்திற்குத்



தயார்படுத்தும் நோக்கில், ஒவ்வொரு வட்டார வள மையத்திலும் **செய்முறை ஆய்வகங்களுடன் கூடிய பிரத்யேகமான வாராந்திர ஒரு மணி நேர செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபோட்டிக்ஸ் பயிற்சி** வழங்கப்படும்.

6. தமிழ்நாடு முழுவதும் புத்தொழில் நிறுவனங்கள், வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் துடிப்பான புத்தாக்கச் சூழலை ஊக்குவிக்கும் வகையில் **2,000 முதன்முறை இளைய தொழில்முனைவோருக்கு 5 ஆண்டு காலத்திற்கு ₹15 லட்சம் வரையிலான வட்டியில்லா கடன்கள்** வழங்கப்படும். மேலும், வணிக வளர்ச்சியின் ஆரம்ப ஆண்டுகளில் வரிச்சுமையைக் குறைக்கும் விதமாக, சாதகமான GST தொடர்பான ஊக்கத்தொகைகளும் மானியங்களும் வழங்கப்படும்.

7. பொருளாதார ரீதியாக பலவீனமான குடும்பங்களைச் சேர்ந்த தமிழ்நாட்டின் இளம் பெண்களின் தொடர்ச்சியான கல்வியை உறுதி செய்யவும், இடைநிற்றலைக் குறைக்கவும், அவர்களுக்குப் பாதுகாப்பான மற்றும் சுயநிறைவு கொண்ட எதிர்காலத்தை உருவாக்கவும் 12 ஆம் வகுப்பு நிறைவு பத்திரம் அறிமுகப்படுத்தப்படும். 12 ஆம் வகுப்பை வெற்றிகரமாக முடித்த பின்னர் திரும்பப் பெறும் வகையில், **வறுமைக் கோட்டிற்கு கீழ் (BPL) உள்ள குடும்பங்களைச் சேர்ந்த ஒவ்வொரு 8 ஆம் வகுப்பு மாணவியின் பெயரிலும் ₹50,000-ஐ அரசு வைப்பு நிதி** வைக்கப்படும்.

8. தமிழ்நாட்டின் இளம் தொழில்முனைவோர்களை வலுப்படுத்தி, புதுமை சார்ந்த வளர்ச்சியை முன்னெடுக்கும் நோக்கில், இளம் தொழில்முனைவோர்களின் தலைமையில், **“நம்ம ஸ்டார்ட் அப்ஸ் செம்ம ஸ்டார்ட் அப்ஸ்”** (Namma Startups Semma Startups) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி தமிழ்நாட்டை இந்தியாவின் முன்னணி ஸ்டார்ட்அப் புதுமை மையமாக மாற்றுவோம். மேலும், மத்திய அரசின் ‘ஸ்டார்ட்அப் இந்தியா’ தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப, இந்த ஸ்டார்ட் அப்-கள் பயன்படுத்தும் நிலங்களுக்குச் சலுகைகள் வழங்கப்படும்.





# விவசாயிகளும் விவசாயமும்



## மண்ணைக் காப்போம்; மரபைக் காப்போம்

**தமிழகத்தின் முதுகெலும்பான விவசாயத்தை நமது மதிப்பிற்குரிய விவசாயிகள் அர்ப்பணிப்புடன் முன்னெடுத்துச் செல்கின்றனர். தமிழக விவசாயிகளுக்கு, குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த நிதிப் பாதுகாப்பு மற்றும் அதிநவீன உள்கட்டமைப்பை வழங்கி, அவர்களை வலுவூட்டி, தமிழகத்தை ஒரு மீள்திறன் கொண்ட, உயர் தொழில்நுட்ப வேளாண் வல்லமை மையமாக மாற்றுவதே பாஜகவின் தொலைநோக்குப் பார்வையாகும். உள்ளூர்மயமாக்கப்பட்ட சேமிப்புத் தீர்வுகள், இயந்திரமயமாக்கப்பட்ட ஆதரவு மற்றும் வலுவான உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைத்து, தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு விவசாயக் குடும்பத்தின் செழிப்பையும் உறுதிசெய்யும் வகையில் ஒரு பன்முகத்தன்மை வாய்ந்த, தொழில்நுட்பத்தை மையமாகக் கொண்ட கிராமப்புற பொருளாதாரத்தை உருவாக்குவதே எங்கள் லட்சியம்.**

1. நிதி நெருக்கடியை எதிர்கொள்ளும் தமிழக விவசாயிகளுக்கு உதவும் வகையில், மத்திய அரசின் முதன்மைத் திட்டமான **பிஎம்-கிசானில்** (பிரதமரின் விவசாயிகள் கௌரவிப்பு நிதி திட்டம்) கூடுதலாக **₹3,000 மாநில நிதியுதவி** வழங்கி, ஆண்டுதோறும் வழங்கப்படும் நிதியுதவியை ₹9,000 ஆக உயர்த்துவோம்.
2. தற்போதைய மாநில அரசு விவசாயிகளைப் புறக்கணித்ததால், விவசாயிகளுக்கு தானிய சேமிப்பு என்பது ஒரு கானல் நீராகிவிட்டது. சேமிப்பு இழப்புகளைத் தடுக்கவும், கட்டாய விற்பனை மற்றும் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளிலிருந்து தமிழக விவசாயிகளைப் பாதுகாக்கவும், நாங்கள் பின்வருவனவற்றை நிறுவுவோம்:
   - a. உள்ளூர் தானியங்கள் மற்றும் பருப்பு வகைகள் சேமிப்பதற்காகப் பஞ்சாயத்து அளவில் **சிறிய எஃகுக் கிடங்குகள்**
   - b. வட்டார அளவில் இடைவழி சேமிப்புக் கிடங்குகளுடன் கூடிய **சந்தை இணைப்பு மையங்கள்**
   - c. மாவட்ட அளவில் உபரி உற்பத்தியைப் பாதுகாக்கும் வகையில் மூலோபாய இருப்பு மற்றும் **பெரிய எஃகு சேமிப்புக் கிடங்குகள்**
   - d. பஞ்சாயத்து அளவில் பழங்கள், காய்கறிகள் மற்றும் மலர்களுக்கான **குளிர்பதனக் கிடங்குகள்.**

3. தற்போதைய அரசாங்கம் சந்தை ஆதரவை வழங்கத் தவறியதாலும், அதைப் புறக்கணித்ததாலும் விவசாயிகள் கடுமையான நிதி நெருக்கடியைச் சந்தித்துள்ளனர். இதை சரிசெய்யும் வகையில் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு **மரவள்ளி, தக்காளி, மாம்பழம், வாழைப்பழம் மற்றும் மிளகாய் ஆகியவற்றுக்கு சந்தை ஆதரவு வழங்கப்படுவதை உறுதி செய்வோம்**. இதன்மூலம் நிலையான வருமானம் உறுதிப்படுத்தப்பட்டு, விவசாயக் குடும்பங்கள் நிம்மதியாக வாழும்.

4. தமிழ்நாட்டின் கலாச்சாரச் சின்னமாக விளங்கும் நாட்டுப் பசு இனங்களைப் பாதுகாக்கவும், நலிவடைந்த குடும்பங்களுக்குப் பொருளாதார ரீதியாக ஒரு நிலையான மாற்று வருமான ஆதாரத்தை உருவாக்கி, அவர்களை நிலைப்படுத்தவும், புவியியல் முக்கியத்துவம் வாய்ந்த **ஒரு நாட்டுப் பசு இனத்தையோ அல்லது பால் தரும் இரண்டு ஆடுகளையோ** சிறு மற்றும் குறு பெண் விவசாயிகளுக்கு வழங்குவோம்.

5. விவசாயிகள் ஒரே பயிர் சுழற்சியை மட்டும் சார்ந்திராமல் இருக்கவும், அவர்களது துயரைத் துடைக்கவும் **சிறு மற்றும் குறைந்த நிலப்பரப்புடைய விவசாயிகளுக்கு உழவர் உறுதுணை திட்டத்தின் கீழ், ஒருமுறை ₹50,000 நிதியுதவி** வழங்கப்படும். இதன் மூலம், கால்நடை வளர்ப்பு, மாடு வளர்ப்பு, இறால் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்பு போன்ற நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து, வருமானம் பன்முகப்படுத்தப்பட்டு, நிலையான வருவாய்க்கு வழி வகுக்கப்படும்.

6. தமிழ்நாட்டு நெல் விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு, நாங்கள் பின்வருவனவற்றைச் செய்வோம்:

   a. பருவமழைக் காலத்தில் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைத் தடுப்பதற்காக, ஒவ்வொரு நேரடிக் கொள்முதல் மையத்திலும் **நெல் உலர்த்தும் களங்களை** அமைப்போம்.

   b. கொள்முதல் உறுதி செய்யப்பட்டு, 48 மணி நேரத்திற்குள் விவசாயிகளின் **வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாகப் பணம்** செலுத்தப்படும்.



7. தற்போதைய அரசின் கீழ் தமிழகப் பருத்தி விவசாயிகள் புறக்கணிக்கப்படுவதைச் சரிசெய்து, பருத்தி விவசாயிகளின் முன்னேற்றத்தையும் புத்துயிரூட்டலையும் ஊக்குவிக்கும் வகையில், **தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு பருத்தி விவசாயிகள் சந்தைப்படுத்தல் கூட்டமைப்பை** அமைப்போம். மேலும், பருத்தி சாகுபடி பகுதிகளிலிருந்து **100 கி.மீ. தொலைவுக்குள் ஒரு ஜின்னிங் ஆலையை** உறுதி செய்வோம்.

8. ஆற்றங்கரைகள் மற்றும் கடலோரப் பகுதிகளில் 10 **கோடி பனை விதைகளை** நடுவோம். அவை இயற்கை உயிரிப் பாதுகாப்புக் கவசங்களாகச் செயல்பட்டு, காலநிலை மாற்றத்தைத் தாங்கும் திறனை வலுப்படுத்தும். மேலும், நீரா, பனை வெல்லம் மற்றும் பனை ஓலை கைவினைப் பொருட்கள் மூலம் நிலையான வாழ்வாதாரங்களை வழங்கி, உள்ளூர் சமூகங்களுக்கு நீண்டகால வருமான வாய்ப்புகளை உருவாக்கும்.

9. விவசாயிகள் சரியான நேரத்தில் அறிவார்ந்த முடிவுகளை எடுத்து பயிர் இழப்புகளைக் குறைக்கும் வகையில், ஒவ்வொரு 5–10 பஞ்சாயத்துகளுக்கும் ஒரு **தானியங்கி வானிலை நிலையம்** (Automatic Weather Station - AWS) அமைக்கப்படும்.

10. திமுக ஆட்சியில் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள விவசாயிகளுக்கான உள்ளீட்டுச் செலவுகளைக் குறைத்து, மலிவான மற்றும் நிலையான விவசாய முறைகளை ஊக்குவிக்கும் வகையில், கிராமப் பஞ்சாயத்துகள் முழுவதும் சுய உதவிக் குழுக்கள் தலைமையிலான **10,000 உயிரி உள்ளீட்டு மையங்களை** நிறுவுவோம்.

11. மத்திய அரசின் வேளாண் இயந்திரமயமாக்கல் குறித்த துணை இயக்கத்தின் (Sub-Mission on Agricultural Mechanisation) கீழ், **கிசான் சம்ருத்தி மையங்களில் "உழவர் இயந்திர வங்கி"**



அமைக்கப்பட்டு, டிராக்டர்கள், ஸ்பிரிங்கிளர்கள், **பசுமை உர விதைகள்** போன்றவை விவசாயிகளுக்கு எளிதில் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

12. தற்போதைய ஆட்சியில் உள்ளீட்டு செலவுகள் அதிகரிப்பு, நீர்ப்பற்றாக்குறை மற்றும் உறுதியான சந்தை இல்லாமை ஆகியவற்றால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், நிலையான மற்றும் மீள்திறன் கொண்ட விவசாய முறைகளை நோக்கி அவர்களுக்குப் பெரிய அளவில் ஊக்கமும் அளிக்கப்படவில்லை. இந்த சவால்களை சமாளிக்கவும், நிலையான வேளாண்மையை ஊக்குவிக்கவும், மத்திய அரசின் 'ஸ்ரீ அன்னா' இயக்கத்தின் கீழ் **தமிழ்நாட்டை இந்தியாவின் சிறுதானிய மையமாக மாற்றுவோம்**:

    a. சிறுதானிய சாகுபடியை 10 லட்சம் ஹெக்டேரிலிருந்து **50 லட்சம் ஹெக்டேருக்கும் மேலாக விரிவுபடுத்துதல்**

    b. அனைத்து **38 மாவட்டங்களிலும் 'ஸ்ரீ அன்னா' அங்காடிகளை அமைத்து ஒரு வலுவான விநியோகச் சங்கிலியை** உருவாக்குதல்

    c. சாகுபடிப் பகுதிகளுக்கு அருகில் **சிறுதானியம் பதப்படுத்தும் அலகுகளை அமைக்க 40% மானியம் வழங்குதல்**

    d. **அரசுப் பள்ளிகளில் மதிய உணவில் சிறுதானியங்களை அறிமுகப்படுத்தி**, சிறுதானிய நுகர்வை ஊக்குவித்தல்

13. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் முக்கியமான கற்றல்களை, மத்திய அரசின் **"பாரத்-விஸ்தார்"** (Bharat-VISTAAR) திட்டத்துடன் ஒருங்கிணைத்து, ஆராய்ச்சி மற்றும் சோதனை செய்யப்பட்ட உள்ளீடுகளின் அடிப்படையில், தகவலறிந்த, தொழில்நுட்பம் சார்ந்த முடிவுகளை விவசாயிகள் எடுக்க உதவுவோம்.







# மீனவர்களும் மீன்வளமும்



# மீனவர்களின் பாதுகாப்பே எங்களின் உறுதிப்பாடு

**தமிழ்நாட்டின் பலம் அதன் கடலோர சமூகங்களிடம் உள்ளது. அவர்களின் மனவுறுதியும் பங்களிப்பும் மாநிலத்தின் வளமான நீலப் பொருளாதாரத்தை உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன. அவர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்துவதும், நலன்களை உறுதி செய்வதும், வளமான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய எதிர்காலத்தை உருவாக்குவதற்கு முக்கியமானதாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற, மீனவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் நியாயமான வருமானம், வலுவான சமூகப் பாதுகாப்பு மற்றும் தொடர்ச்சியான ஆதரவை வழங்கும் ஒரு மீன்வளர் சூழல் அமைப்பை உருவாக்குவதை பாஜக நோக்கமாகக் கொண்டுள்ளது. நவீன உள்கட்டமைப்பு, மேம்பட்ட சந்தை அணுகல், உயர்தர பாதுகாப்பு அமைப்புகள், தரமான வீட்டு வசதி மற்றும் உலகத்தரமான கடல்சார் கல்வி ஆகியவற்றின் மூலம் அவர்களை வலுப்படுத்துவதே எங்கள் உறுதிப்பாடு. இந்த தொலைநோக்குப் பார்வையின் மூலம், நிலைத்தன்மை கொண்ட மற்றும் வளமான கடலோர சமூகங்களை உருவாக்கி, இந்தியாவின் நீலப் பொருளாதாரத்தில் தமிழ்நாட்டை முன்னணி மாநிலமாக உருவாக்குவதே பாஜகவின் இலக்காகும்.**

1. தமிழக மீனவர்களுக்குக் குறிப்பாக மீன்பிடி தடை மற்றும் வருமானக் குறைபாடு காலங்களில் தேவையான ஆதரவை வழங்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். நியாயமான இழப்பீட்டையும் நிலையான வருமானப் பாதுகாப்பையும் உறுதி செய்ய, பாஜக பின்வருவனவற்றைச் செய்யும்:
    a. 61 நாள் **மீன்பிடித் தடை காலத்தில்** வழங்கப்படும் இழப்பீட்டை **₹8,000-லிருந்து ₹12,000** ஆக உயர்த்துதல்
    b. **மீன்பிடி குறைநிலை காலத்தில்** மீனவக் குடும்பங்களுக்கான சிறப்புப் படியை **₹6,000-லிருந்து ₹8,000** ஆக உயர்த்துதல்
    c. 60 வயதுக்கு மேற்பட்ட அனைத்து மீனவர்களுக்கும் மாதம் **₹2,000 ஓய்வூதியம்** வழங்குதல்
2. பருவமழை பொய்த்தல் மற்றும் உற்பத்தி பாதிப்பு காலங்களில், உள்நாட்டு மீனவர்களுக்கு **மாதம் ₹5,000 உதவித்தொகை** வழங்கி, அவசர நிலைகளில் அவர்களின் வருமான நிலைத்தன்மையை உறுதி செய்வோம்.

3. சந்தை அணுகலின்மை பிரச்சனையைத் தீர்க்க, **14 கடலோர மாவட்டங்களிலும் வாராந்திர 'கடல் உணவு சந்தைகளை'** நிறுவுவோம். சுகாதாரமான கடைகள், ஏல முறைகள் மற்றும் குளிர் சேமிப்பு வசதிகளுடன் கூடிய இந்த சந்தைகள், மீனவர்களுக்கு சிறந்த விலையையும் நேரடி சந்தை இணைப்பையும் உறுதி செய்யும்.

4. துயரத்தில் உள்ள மீனவர்களுக்கு உதவவும், மருத்துவ அவசரநிலைகள் மற்றும் நெருக்கடிச் சூழ்நிலைகளின் போது உதவி வழங்கவும் **'கடல் ஆம்புலன்ஸ் சேவையை'** அறிமுகப்படுத்துவோம். மேலும், அனைத்து ஆழ்கடல், உள்நாட்டு மற்றும் ஆழமற்ற மீன்பிடிப் படகுகளுக்கும் **இலவச ஜிபிஎஸ், விஎச்எஃப் ரேடியோக்கள், உயிர் காப்புச் சட்டைகள் மற்றும் வானிலை எச்சரிக்கை கருவிகளைப்** பொருத்தி, கடற்கரை முழுவதும் கரையோர உயிர் காப்பு அமைப்புகளை வலுப்படுத்துவோம்.

5. கடலோர இளைஞர்களின் மறைந்துள்ள திறன்களை வெளிக்கொணர, **ராமநாதபுரம் மாவட்டத்தில் உலகத் தரத்திலான கடல்சார் கல்லூரி** (Maritime College) நிறுவப்படும். இதன் மூலம் திறன்மிக்க வேலைவாய்ப்புகள் உருவாகி, தமிழ்நாடு கடல்சார் கல்வியின் முக்கிய மையமாக உருவாகும்.

6. மீனவர்களின் பாதுகாப்பையும் சமூக நலனையும் உறுதி செய்ய, அடுத்த ஐந்து ஆண்டுகளில் மத்திய அரசின் முக்கிய திட்டமான **"பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா" திட்டத்தின் (பிரதமரின் வீட்டு வசதித் திட்டம்)** கீழ் 3 லட்சம் வீடுகள் கட்டப்படும். இதன் மூலம் மரியாதையுள்ள, பேரிடர் எதிர்ப்புத் திறன் கொண்ட குடியிருப்புகள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு, கடலோர வாழ்வாதாரமும் சமூகப் பாதுகாப்பும் வலுப்படுத்தப்படும்.

7. தமிழ்நாட்டின் கடலோர பொருளாதாரத்தின் முதுகெலும்பான மீனவர்களின் பொருளாதார நலன்களை மேலும் மேம்படுத்தும் பொருட்டு, மத்திய அரசின் முக்கிய திட்டமான **பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனாவின்** (பிரதமரின் மீன்வளத் திட்டம்) கீழ்:

   a. மீனவர்களுக்கு **ஐஸ் பெட்டிகள் கொடுப்பதற்காக, வழங்கப்படும் மானியத்தில் கூடுதலாக 20% மாநில மானியம் வழங்கப்படும்**

   b. தங்களின் படகுகளை **ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக** மாற்ற விரும்பும் பயனாளிகளுக்குத் தேவையான முழுமையான ஆதரவு வழங்கப்படும்.





# அனைவருக்கும் ஆரோக்கியம்





# நலமான தமிழ்நாடு வளமான வாழ்வு

**வளமான மற்றும் வலிமையான மாநிலத்திற்கு ஆரோக்கியமான மக்களே அடிப்படை; தரமான மருத்துவ சிகிச்சை என்பது சலுகை அல்ல, உரிமையாகும். நவீன மாவட்ட மருத்துவமனைகள் முதல் கிராமப்புறங்களில் 24 மணி நேரமும் செயல்படும் சுகாதார மையங்கள் வரை, மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்தி சுகாதாரச் சேவையில் உள்ள இடைவெளிகளைக் குறைப்பதே பாரதிய ஜனதா கட்சியின் உறுதிப்பாடாகும். நோய் வராமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், தாய்மார்கள் மற்றும் முதியோருக்கான சிறப்பு சிகிச்சை வசதிகள் மற்றும் மலிவு விலை மருந்துகள் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் ஆரோக்கியமான தமிழகத்தை உருவாக்குவதே நமது நோக்கம். இதன் மூலம், நோய் மற்றும் மருத்துவச் செலவுகளால் ஏற்படும் நிதி நெருக்கடியிலிருந்து ஒவ்வொரு குடும்பத்தையும் பாதுகாக்கும் அரணாக நமது அரசு விளங்கும்.**

1. திமுக அரசின் காழ்ப்புணர்ச்சி அரசியலால், மத்திய அரசின் முக்கிய திட்டமான **'ஆயுஷ்மான் பாரத்' திட்டத்தில் தமிழக மக்கள் பயனடைவது தடுக்கப்பட்டுள்ளது**. இதன் மூலம் பாரதத்தின் பொது சுகாதாரக் காப்பீட்டுப் பலன்கள் லட்சக்கணக்கான தமிழக மக்களுக்குக் கிடைக்காமல் பறிக்கப்பட்டுள்ளது. இந்நிலையை மாற்றி, தமிழகத்தில் தகுதியுள்ள அனைத்துக் குடிமக்களுக்கும் **100% காப்பீடு கிடைப்பதை நாங்கள் உறுதி செய்வோம்**. இதன் மூலம் ஒவ்வொரு குடும்பமும் எவ்வித நிதிச் சுமையுமின்றி, உயர்தர மருத்துவ சிகிச்சை பெறுவதை நாங்கள் உறுதிசெய்வோம்.

2. நம்பகமான பொதுச் சுகாதாரச் சேவையை உறுதி செய்ய, பின்வருவனவற்றின் மூலம் தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்ட அரசு மருத்துவமனையையும் நாங்கள் முழுமையாக மேம்படுத்துவோம்:

   a. கூடுதலாக **மூன்று ஆம்புலன்ஸ் வாகனங்கள்** ஒவ்வொரு மாவட்ட மருத்துவமனைக்கும் வழங்கப்படும்.

   b. ஒரு **'சூப்பர் ஸ்பெஷாலிட்டி'** (உயர்தர சிறப்புச் சிகிச்சை) பிரிவு நிறுவப்படும்.

c. அனைவருக்குமான இலவச **‘டயாலிசிஸ்’** (Dialysis) மையங்கள் ஒவ்வொரு மாவட்ட மருத்துவமனையிலும் ஒன்று நிறுவப்படும்.

d. ஒவ்வொரு மாவட்ட மருத்துவமனையிலும் ஒரு **போதை மீட்பு மற்றும் மறுவாழ்வு மையம்** நிறுவப்படும்.

e. அதிநவீன வசதிகளுடன் கூடிய **4 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவுகள்** (ICU) உருவாக்கப்படும்.

f. முழுமையாக இயங்கும் **நவீன அறுவை சிகிச்சை அரங்குகள்** (Operation Theatres) அமைக்கப்படும்.

g. **முதியோர் நலவாழ்வு மையம்** நிறுவப்படும்.

h. அதிநவீன வசதிகள் கொண்ட **10 படுக்கைகள் உடைய குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவுகள்** (PICU) உருவாக்கப்படும்.

i. தாய்மார்களுக்கான பிரத்யேக **‘தாய்ப்பால் வங்கிகள்’** (Mother’s Milk Banks) நிறுவப்படும்.

3. ஆரோக்கியமான சமூகத்தை உறுதி செய்யவும், பருவக்கால நோய்கள் பரவுவதைத் தடுக்கவும், அனைத்து நகர்ப்புற வார்டுகள் மற்றும் கிராம ஊராட்சிகளில் **‘பருவமழைக்கு முன்னும் பின்னும்’** முறையான கொசு மற்றும் பூச்சிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் (Vector-control drives) கட்டாயமாக மேற்கொள்ளப்படும். தேங்கி நிற்கும் நீர் மற்றும் கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களை நீக்குவதில் இப்பணிகள் தீவிர கவனம் செலுத்தும்.



4. நம்பகமான பொதுச் சுகாதாரச் சேவையை ஒவ்வொரு குடிமகனுக்கும் உறுதி செய்ய, ஆரம்ப சுகாதார மையங்களை (PHCs) அத்தியாவசிய மருத்துவச் சேவைகளை வழங்கும் வலுவான மற்றும் முழுமையான செயல்பாட்டு மையங்களாகப் பின்வருவனவற்றின் மூலம் மேம்படுத்துவோம்:

   a. **மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் அடிப்படை நோய் கண்டறிதல் வசதிகள் 24 மணி நேரமும் தடையின்றி கிடைப்பது** உறுதி செய்யப்படும்

   b. குறிப்பிட்ட நாட்களில் இதயவியல், மகப்பேறியல் மற்றும் எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர்கள் ஆரம்ப சுகாதார மையங்களுக்குக் கட்டாயம் வந்து சிகிச்சை அளிக்கும் **சுழற்சிமுறை** அமல்படுத்தப்படும். இதன் மூலம் கிராமப்புற மக்களுக்கும் **உயர்தர சிகிச்சை**, தங்கள் குடியிருப்புப் பகுதிகளிலேயே கிடைப்பது உறுதி செய்யப்படும்.

   c. **பொது சுகாதார சேவையை வலுப்படுத்த**, மாநிலம் முழுவதும் **தகுதியான மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் துணை மருத்துவப் பணியாளர்கள்** நியமிக்கப்படுவார்கள்.

5. தமிழகத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நம்பகமான மற்றும் விரிவான மருத்துவச் சேவை கிடைப்பதை உறுதி செய்யவும், அதே வேளையில் போதைப் பழக்கம், முதியோர் நலன் மற்றும் அவசர சிகிச்சை போன்ற சவால்களுக்குத் தீர்வு காணவும், மாநிலத்தின் சுகாதாரக் கட்டமைப்பைப் பின்வரும் நடவடிக்கைகளின் மூலம் நாங்கள் வலுப்படுத்துவோம்:

   a. 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய முதியவர்கள் அனைவருக்கும், நோய் கண்டறிதல் மற்றும் மேல்சிகிச்சை ஆலோசனைகள் உள்ளிட்ட **'முழுமையான வருடாந்திர வீட்டு மருத்துவப் பரிசோதனையை'** அவர்களின் இல்லத்திற்கே சென்று வழங்குவோம்.



b. ஒவ்வொரு மாவட்டத்திலும் **'முழுமையான போதை மீட்பு மற்றும் மறுவாழ்வு மையங்களை'** உறுதி செய்யும் வகையில் ஒரு 'மீட்பு இயக்கம்' (Recovery Mission) தொடங்கப்படும்.

c. மதுரை **எய்ம்ஸ் (AIIMS)** மருத்துவமனைக் கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்தி முழுமையாக முடிப்போம்.

d. **கிழக்கு கடற்கரை சாலையில் (ECR) 'அதிநவீன விபத்து சிகிச்சை மையம்'** (State-of-the-art Trauma Care Centre) நிறுவப்படும்

e. மலைப்பகுதிகள், தொலைதூர மற்றும் அணுக முடியாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு உரிய நேரத்தில் மருத்துவ உதவி கிடைப்பதை உறுதி செய்ய, இருசக்கர வாகன ஆம்புலன்ஸ்களின் (Motor Bike Ambulances) எண்ணிக்கை **25-லிருந்து 50-ஆக உயர்த்தப்படும்**. இதில் தமிழகத்தின் கொங்குப் பகுதிக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

f. அரிய வகை நோய்களால் ஏற்படும் **நிதி நெருக்கடியிலிருந்து தமிழகக் குடும்பங்களைப் பாதுகாக்க 100 கோடி ரூபாய்** பிரத்யேகமாக ஒதுக்கப்படும்.

6. ஒவ்வொரு தமிழக இல்லங்களுக்கு அருகிலேயே எளிதான மற்றும் மலிவான நோய் கண்டறிதல் சேவைகளைக் கொண்டு சேர்க்கும் வகையில், ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு



இரண்டு **'நடமாடும் ஆய்வகங்கள்'** (Mobile Labs) அமைக்கப்படும். இவை வீட்டிற்கு அருகிலேயே செயல்படும் சுகாதார அலகுகளாகத் திகழும். மேலும், அனைத்துக் குடியிருப்பாளர்களுக்கும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மலிவு விலையில் **இரத்தப் பரிசோதனைகளும், இலவச அடிப்படை மருத்துவப் பரிசோதனைகளும்** வழங்கப்படும்.

7. முதியவர்களின் தெளிவான பார்வையையும், மரியாதையையும், வாழ்க்கைத் தரத்தையும் உறுதி செய்யும் வகையில், 50 வயதிற்கு மேற்பட்ட குடிமக்களுக்குக் குறிப்பிட்ட கால இடைவெளியில் **'கண் பரிசோதனைகள்'** மேற்கொள்ளப்படும். 70 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கு **'இலவசக் கண்ணாடிகள்'** வழங்கப்படும். மேலும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள (BPL) குடும்பங்களைச் சேர்ந்த தகுதியுள்ள முதியவர்களுக்கு **'இலவச கண்புரை அறுவை சிகிச்சைகள்'** (Cataract surgeries) செய்யப்படும்.

8. மகளிர் நலனைப் பேணும் வகையில், 40 வயதிற்கு மேற்பட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள (BPL) பெண்களுக்கு **'மகளிர் வலிமைத் திட்டம்'** தொடங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் அவர்களுக்கு மானிய விலையில் **எலும்பு அடர்த்திப் பரிசோதனை** (Bone density screening), ஊட்டச்சத்து ஆலோசனைகள் மற்றும் **வைட்டமின்-டி, கால்சியம், மல்டி-வைட்டமின் சத்து மாத்திரைகள்** வழங்கப்படும்.

9. **'ஜன் அவுஷதி கேந்திரா'** (Jan Aushadhi Kendra) மூலம் உயிர் காக்கும் மருந்துகள் ஒவ்வொரு தமிழகக் குடிமகனுக்கும் கிடைப்பதை மத்திய அரசு உறுதி செய்துள்ளது. இதனை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்லும் வகையில், தற்போதுள்ள **1,432 ஜன் அவுஷதி கேந்திராக்களின் எண்ணிக்கையை 3,000-ஆக உயர்த்துவோம்**. குறிப்பாக, கிராமப்புறங்கள் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் கவனம் செலுத்தி, ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் **5 கி.மீ சுற்றளவிற்குள் மலிவு விலை 'ஜெனரிக்'** மருந்துகள் கிடைப்பதை நமது அரசு உறுதி செய்யும்.





# தமிழ் கலாச்சாரமும் சுற்றுலாத்துறையும்



# பண்பாடு காப்போம்; தமிழகத்தை உயர்த்துவோம்

**தமிழ்நாட்டின் அடையாளம் என்பது அதன் வளமான கலாச்சாரப் பாரம்பரியம், காலத்தால் அழியாத ஆன்மீகம், மொழியின் ஆழமான சிறப்பு மற்றும் அதன் துடிப்பான மரபுகளில் வேரூன்றியுள்ளது. நமது கோயில்கள், கலைகள் மற்றும் பண்டையகால அறிவாற்றல் ஆகியவை பாதுகாக்கப்படுவதையும் கொண்டாடப்படுவதையும் உறுதிசெய்து, இந்த நாகரிகப் பாரம்பரியத்தை உள்ளூர் பெருமையிலிருந்து உலகளாவிய புகழுக்குக் கொண்டு சென்று பாஜக உயர்த்தும். கலாச்சார மீட்டெடுப்பை, நவீன சுற்றுலா மற்றும் பொருளாதார மேம்பாட்டோடு ஒருங்கிணைப்பதன் மூலம், நமது முன்னோர்களின் புனிதமான மரபுகளைப் போற்றுவோம் என்றும், தமிழ்க் கலாச்சாரத்தின் பெருமையை ஒட்டுமொத்த உலகிற்கும் பறைசாற்றுவோம் என்றும் உறுதியளிக்கிறோம்.**

1. தமிழறிவு, வீரம் மற்றும் பண்பாட்டின் கலங்கரை விளக்கமாகத் திகழும் தமிழ்க் கடவுள் முருகப் பெருமானின் புகழைப் போற்றும் வகையில், அவரது ஆன்மீக மற்றும் கலாச்சார முக்கியத்துவத்தை அங்கீகரித்து, **தைப்பூசத் திருநாளை மாநில விழாவாக அறிவித்து கொண்டாடுவோம்**.
2. **திருப்பரங்குன்ற மலை உச்சியில் தீபத்தூணில் தீபம் ஏற்றுவது உள்ளிட்ட கார்த்திகை தீபத் திருவிழாவின் புனிதமான மரபுகள் தடையின்றித் தொடர்வதை உறுதி செய்து**, தமிழ் மக்களின் புனிதமான பாரம்பரியத்தை பாதுகாப்போம். இந்தப் பழக்கத்தை வரும் தலைமுறையினருக்கும் கொண்டு செல்லத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்.
3. தென் தமிழகத்தின் ஆன்மீக மற்றும் பொருளாதார வளர்ச்சியினை மீட்டெடுக்கும் வகையில், பிரத்யேகத் **"தென் தமிழகத் திருத்தல யாத்திரை"** திட்டத்தை உருவாக்குவோம். உள்கட்டமைப்பை மேம்படுத்துவதோடு, தென் மாவட்டங்களில் பக்தர்களின் பயண அனுபவத்தையும் மேம்படுத்தி, அப்பகுதியின் செழுமையான கலாச்சாரப் பாரம்பரியத்தை முன்னெடுப்போம்.
4. நமது மாநிலத்தின் ஒவ்வொரு மூலையையும் பொருளாதார இயந்திரமாக மாற்றி, நமது நிலப்பரப்பு மற்றும் பாரம்பரியத்தின் ஆழத்தைக் கொண்டாடுவோம்.

இதற்காகப் பின்வரும் கருப்பொருள் சார்ந்த சிறப்பு சுற்றுலாத் திட்டங்களை உருவாக்கி, தமிழகத்தில் ஆண்டு முழுவதிற்குமான சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்துவோம்:

a. **கடல் சுற்றுலா:** கப்பல் பயணம், நீர் விளையாட்டுகள் மற்றும் கடல்சார் பொழுதுபோக்கு நடவடிக்கைகளை உள்ளடக்கிய கடற்கரை சுற்றுலா.

b. **மலை சுற்றுலா:** நடைபயணப் பாதைகள், காபி-தேயிலை தோட்ட சுற்றுலாக்கள் மற்றும் டோடா & படகா பழங்குடியினக் கலாச்சாரங்களின் ஆழமான அனுபவங்கள் வழியாக மலை சார்ந்த பகுதிகளுக்கான சுற்றுலாவை மேம்படுத்துவோம்.

c. **வனச் சுற்றுலா:** காட்டுப் பயணங்கள் (Jungle Safaris), பறவைகள் சரணாலயங்கள் மற்றும் தேசியப் பூங்காக்களுக்கு வழி வகை செய்யும் வனச் சுற்றுலா.

d. **பிரத்யேக ஆன்மிகச் சுற்றுலா:** கோவில் சுற்றுலாக்களை அடிப்படையாகக் கொண்ட பாரம்பரிய சுற்றுலாக்கள்.

5. தமிழகம் ஆலயங்களின் பூமி. காலத்தால் அழியாத இத்திருக்கோயில்கள் இம்மண்ணின் மாண்பினை வடிவமைத்துள்ளதுடன், மாநிலத்தில் வலிமையான, தொடர்ச்சியான நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பாரம்பரிய மரபுகளை வெளிப்படுத்துகின்றன. இந்த வளமான நாட்டுப்புறக் கலைகள் மற்றும் கோயில் மரபுகளைப் பாதுகாக்கவும், அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லவும் பின்வருவனவற்றை மேற்கொள்வோம்:

a. **திருக்கோவில் நித்ய பூஜை தொகுப்புத்** திட்டத்தின் மூலம், கற்பூரம், நெய்/எண்ணெய், 60 கிலோ அரிசி, குங்குமம், மஞ்சள் மற்றும் விபூதி ஆகியவை அடங்கிய மாதாந்திர நித்ய பூஜை தொகுப்பு வழங்கப்படும்.

b. **கோவில் மணி, தாம்பூலம், ஆரத்தி பொருட்கள் மற்றும் பூசாரிகளுக்கு வேட்டித் தொகுப்பு** போன்ற அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படும்.

c. சிறு மற்றும் நடுத்தரக் கோவில்களின் தினசரி கோவில் செயல்பாடுகளுக்கும் பராமரிப்புகளுக்கும் ஆண்டுக்கு **₹25,000** வழங்கப்படும்.

d. பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்த கோவில் வளாகங்களில் **சூரிய சக்தியில் இயங்கும் விளக்குகள்** நிறுவப்படும்.



e. ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக பக்தர்கள் வருகை தரும் முக்கியமான கோவில்களில், அந்தந்தப் பகுதி வாழ் மக்களுக்காகப் பிரத்யேகமாக **தினமும் இரண்டு மணி நேர சிறப்பு தரிசன நேரம்** அமல்படுத்தப்படும்.

f. தமிழகத்தின் செழுமையான மரபுகள், சிறு தெய்வங்கள் மற்றும் நாட்டுப்புறக் கலை வடிவங்களை வெளிப்படுத்தும் வகையில் இந்தியாவின் முக்கிய நகரங்களில் **“தமிழக கிராம தெய்வங்கள் சங்கமம்”** நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

6. தமிழ்ப் பாரம்பரியத்தைக் கொண்டாடி, அதன் செழுமையான கலாச்சார, இலக்கிய மற்றும் வரலாற்று மரபை தேசிய மற்றும் உலகளாவிய அரங்கிற்குக் கொண்டு செல்லும் வகையில், தமிழ்க் கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் வரலாற்றை மேம்படுத்த இந்தியாவின் முக்கிய நகரங்களில் **மகாகவி பாரதியார் தமிழ் மையம்** நிறுவப்படும். மேலும், தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் ஆராய்ச்சியை சர்வதேச அளவில் ஊக்குவிக்க உலகளாவிய முன்னணி பல்கலைக்கழகங்களில் **தமிழ் இருக்கைகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படும்**.

7. தமிழின் பண்டைய பாரம்பரியத்தை ஆராய்ச்சி செய்யவும், கண்டறியவும் தமிழ் மொழி உலகளாவிய அங்கீகாரத்தினைப் பெறவும், மத்திய பட்ஜெட் 2026-ன் முன்முயற்சிக்கு இணங்க, **பண்டைய தமிழ்ப் பாரம்பரிய தளங்கள் குறித்த அறிவியல் ஆய்வுகளுக்காக பிரத்யேக நிதி** ஒதுக்கப்படும்.

8. தமிழர்களின் வீரத்தைப் பிரதிபலிக்கும் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டை கௌரவிப்போம். அதே வேளையில், இந்தப் பெருமைமிக்க பாரம்பரியத்தை நிலைநிறுத்துபவர்களின் நலனும் பாதுகாப்பும் உறுதிசெய்யப்படும். ஜல்லிக்கட்டுக் காளைகள் வளர்ப்பவர்களுக்கு **மாதம் ₹2,000 உதவித்தொகை** வழங்கப்படும். துரதிர்ஷ்டவசமாக ஒரு பங்கேற்பாளர் திடீரென உயிரிழக்க நேரிட்டால், அவரது குடும்பத்திற்கு **₹10 லட்சம் கருணைத்தொகையும்**, பலத்த காயங்களுக்கு **₹2 லட்சம் இழப்பீடும்** வழங்கப்படும்.



9. திமுக ஆட்சியில் கோவில் கலைஞர்களும், **ஓதுவார்** போன்ற பாரம்பரிய கலைஞர்களும் நீண்டகாலமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். தமிழகக் கோவில்களின் புராதனக் கலைஞர்களையும் இசையையும் பேணிப் பாதுகாக்கும் வகையில், ஓதுவார்கள் முக்கியப் பங்காற்றும் தகுதியுள்ள கோவில்களுக்கு **மாதம் ₹2,000 மதிப்பூதியம்** வழங்கப்படும்.

10. செழுமையான பாரம்பரியத்தைக் கொண்ட தமிழ்நாட்டின் கைத்தறி நெசவாளர்கள் குறைந்த வருமானம் மற்றும் குறைந்த சந்தை வாய்ப்பு போன்ற சவால்களை எதிர்கொள்கின்றனர். தமிழகத் துணிகளை ஊக்குவிப்பதன் மூலமும், அதற்கான சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துவதன் மூலமும், இந்த காலத்தால் அழியாத பாரம்பரியத்தின் பெருமையை மீட்டெடுக்க நாங்கள் உறுதியுடன் இருக்கிறோம். இதற்காக:


    a. கைத்தறி பட்டுகள், பருத்தித் துணிகள் மற்றும் பாரம்பரிய எம்பிராய்டரி வேலைப்பாடுகள் உள்ளிட்ட மாநிலத்தின் அனைத்து உள்ளூர் துணிகளும் **தமிழ் ஆடை** என்ற ஒரே பெயரின் கீழ் கொண்டு வரப்படும்.

    b. மத்திய மகாத்மா காந்தி கிராம ஸ்வராஜ் திட்டத்தின் கீழ், **உள்ளூர் கைத்தறி துணிகள் கொள்முதல்** செய்யப்படும்.

    c. சுயஉதவிக் குழுக்களால் இயக்கப்படும் **தமிழ் ஆடை விற்பனை நிலையங்கள்** முக்கிய சுற்றுலாத் தலங்களின் வாயில்களில் கடை அமைக்கப்பட்டு விற்கப்படும்.

11. சங்க காலத் தமிழ்ப் பாரம்பரியத்தின் செழுமையை இந்தியா முழுவதும் கொண்டு செல்லும் வகையில், சங்க இலக்கியத்தின் 10 படைப்புகளை **22 இந்திய மொழிகளில் நவீன காலப் படைப்புகளாக மொழிபெயர்க்கும்** திட்டம் தொடங்கப்படும்.

12. அருணாசலேஸ்வரரின் அருளைப் பெறுவதற்கு உலகெங்கிலும் இருந்து வரும் பக்தர்களுக்குச் சிறந்த வசதிகளை வழங்க, **திருவண்ணாமலை கிரிவலப் பாதையை அழகுபடுத்தி மேம்படுத்துவதை** உறுதி செய்வோம்.







# பொருளாதாரமும் தொழில்துறையும்

## வாக்குறுதிகள்



# பொருளாதார வளர்ச்சி, தமிழகத்தின் எழுச்சி

**இந்தியாவின் வளர்ச்சிக்கான வரலாற்றின் முதுகெலும்பாகத் திகழும் தமிழகப் பொருளாதாரத்தின் உண்மையான பலம், தமிழக மக்களின் ஈடிணையற்ற தொழில்முனைவோர் சக்தியும் மாநிலத்தின் வியக்கத்தக்க உற்பத்தித் திறனுமே ஆகும். ஆனால், தற்போதைய திமுக ஆட்சியில், வளர்ச்சியின் பலன்கள் மக்களைச் சென்றடைவது தடுக்கப்பட்டு, சுயலாபத்திற்காக மட்டுமே வகுக்கப்படும் கொள்கைகளாலும், தலைவிரித்தாடும் ஊழலாலும் இந்தத் துடிப்பான துறை முடக்கப்பட்டுள்ளது. பாரதிய ஜனதா கட்சி இந்தச் சீர்கேடுகளைச் சரி செய்வது மட்டுமல்லாமல், இத்தகைய வீழ்ச்சியை முற்றிலுமாக மாற்றியமைத்து, தமிழகத்தின் தொழில்துறை வலிமையை அதன் முழுத் திறனுடன் வெளிக்கொணர உறுதியுடன் செயல்படும். பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் தொலைநோக்குப் பார்வையின் கீழ், நாட்டின் முதல் 'பி.எம். மித்ரா' (PM MITRA) ஜவுளிப் பூங்காக்களில் ஒன்று விருதுநகர் மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த அடித்தளத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில், தமிழகத்தின் தொழில்துறை ஆற்றலை மேம்படுத்த இத்தகைய சிறப்பான திட்டங்களை நாங்கள் தொடர்ந்து முன்னெடுப்போம்.**

1. மத்திய அரசின் தொலைநோக்குத் திட்டமான **'பாரத் உத்யோகிக் விகாஸ் யோஜனா'** (BHAVYA) திட்டத்தின் கீழ், **தமிழகத்தில் 10 'பிளக்-அண்ட்-பிளே' (Plug-and-Play) தொழிற்பூங்காக்கள்** அமைக்கப்படுவதை உறுதி செய்ய மத்திய அரசுடன் இணைந்து செயல்படுவோம். தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளும் தயார் நிலையில் உள்ள இந்தத் தொழிற்பூங்காக்கள் மூலம், தமிழகத் தொழிலதிபர்கள் அத்திட்டத்தின் முழுப் பலன்களையும் பெறுவதை நமது அரசு உறுதி செய்யும்.
2. பாரதத்தின் மருத்துவத் தலைநகரான தமிழகத்தில், உலகத்தரம் வாய்ந்த மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உற்பத்திச் சூழலை மேம்படுத்தும் வகையில், சென்னை, கோவை, திருச்சி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் **பிரத்யேகத் தொழில் தொகுதிகள்** (Dedicated clusters) உருவாக்கப்படும்.

3. கன்னியாகுமரியை வெறும் மூலப்பொருள் ஏற்றுமதி செய்யும் இடத்திலிருந்து, ஒரு **உற்பத்தி மையமாக** மாற்ற, அங்கு ஓர் **‘அதிநவீன உலகளாவிய ரப்பர் பூங்கா’** அமைக்கப்படும். இதில் ரப்பர் பதப்படுத்தும் அலகுகளும் ஆராய்ச்சி ஆய்வகங்களும் அமைக்கப்படும். இதன் மூலம் நமது ரப்பர் விவசாயிகள் தங்களின் விளைபொருட்களுக்குக் கூடுதல் மதிப்பைப் பெற்று, **உயர்தரப் பொருளாதார சங்கிலியில் (Value Chain)** இணைவது உறுதி செய்யப்படும்.

4. தமிழகம் முழுவதும் நெசவாளர்கள் நமது கலாச்சாரத்தையும் பொருளாதாரத்தையும் அரணாக நின்று பாதுகாக்கின்றனர். அவர்களின் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில், விலை ஏற்ற இறக்கங்களில் இருந்து விசைத்தறி மற்றும் கைத்தறி நெசவாளர்களைக் காக்கவும், சரியான நேரத்தில் கொள்முதலும் ஊதியமும் கிடைப்பதை உறுதி செய்யவும் **‘நூல் விலை நிலைப்படுத்துதல் மற்றும் உறுதிப்பாட்டுச் செயல்முறை’ (Yarn Price Stabilisation & Assurance Mechanism)** செயல்படுத்தப்படும். மேலும், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்ட விசைத்தறித் தொழிலாளர்களுக்கு **20% ஊதிய உயர்வை** அமல்படுத்துவோம். இதனை முதலாளிகள் முறையாகப் பின்பற்றுவது உறுதி செய்யப்படும். அத்துடன், கடந்த **11 மாதங்களாக நிலுவையில் உள்ள ஊதிய பாக்கிகளும்** முழுமையாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5. தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் **குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (MSMEs)** மிக முக்கியப் பங்காற்றுகின்றன. இத்துறையின் பொருளாதாரப் பாதுகாப்பு, மற்றும் செழுமை ஆகியவை மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு அவசியமானவை. இதனை உறுதிப்படுத்தும் வகையில், தமிழக அரசின் அனைத்துக் கொள்முதல்களிலும் **25% உள்ளூர் MSME நிறுவனங்கள் மூலமாகவே மேற்கொள்ளப்படுவதை** உறுதி செய்வோம். மேலும், இந்தப் பொருட்களுக்கான ஊதியம் **GeM (Government e-Marketplace)** இணையதளம் வாயிலாக **30 நாட்களுக்குள்** வழங்கப்படும்.



6. தமிழகத்தின் ஒவ்வொரு கைவினைக் கலைஞரும், தொழில்முனைவோரும் உலகின் மிகப்பெரிய, வளமான சந்தைகளில் நேரடியாகத் தங்கள் தயாரிப்புகளை விற்பனை செய்வதையும், அதன் மூலம் உலகளாவியச் செல்வத்தை நமது மண்ணிற்குக் கொண்டு வருவதையும் உறுதி செய்வதே நமது நோக்கம். இதற்காகக் குறிப்பிட்ட தயாரிப்புகளுக்குப் பெயர்பெற்ற ஒவ்வொரு மாவட்டமும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடனான நமது **'தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களின்'** (FTAs) முழுப் பலனையும் பெறுவதை நாங்கள் உறுதி செய்வோம்.

7. தமிழகத்தில் நம்பகமான மற்றும் நிலையான உற்பத்திச் சூழலை உருவாக்குவதற்காக, பின்வரும் தொழில்துறை தொகுதிகளை (Industrial Clusters) மேம்படுத்துவோம்:

    a. **கப்பல் கட்டும் மற்றும் பழுதுபார்க்கும் மையம்**

    b. **பசுமை எரிசக்தி உபகரணங்களான** சூரிய ஒளி மின்சக்தித் தகடுகள், காற்றாலை மின்னியற்றிகள் (Wind turbines), நீர்மின் அமைப்புகள் (Hydropower systems) போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த எரிசக்தி சாதனங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் பிரத்யேக மையங்கள் அமைக்கப்படும்.





# உள்கட்டமைப்பு



# தமிழகம் மென்பட நவீன அடித்தளம்

**நவீன, எதிர்காலத்திற்குத் தயாரான ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்குத் தகவல் தொடர்பு வசதிகள், உள்கட்டமைப்பு மற்றும் காலநிலை மாற்றத்தைத் தாங்கும் திறன் ஆகியவையே முக்கியமாகும். தமிழகத்தை உலகத்தரம் வாய்ந்த ரயில், வான் மற்றும் கடல்வழிப் போக்குவரத்து வலைப்பின்னல்களுடன் இணைப்பதன் மூலம், நமது உள்ளூர் தொழில்துறைகளை சர்வதேச சந்தையுடன் தடையின்றி இணைக்கும் அதிவேக மற்றும் நிலையான தமிழகத்தை உருவாக்குவதே பாஜகவின் இலக்காகும். மேலும், அதிநவீனப் பேரிடர் மேலாண்மை மற்றும் பசுமை போக்குவரத்துத் தீர்வுகளை ஒருங்கிணைப்பதன் மூலம், நமது வளர்ச்சி வேகமானதாக மட்டுமல்லாமல் பாதுகாப்பானதாகவும் இருப்பதை நாங்கள் உறுதி செய்வோம். இதன் மூலம் ஒவ்வொரு குடிமகனையும் இணைப்பதுடன், எதிர்கால சவால்களிலிருந்து ஒவ்வொரு நகரத்தையும் பாதுகாப்போம்.**

1. தமிழகம் போன்ற புவியியல் ரீதியாக பன்முகத்தன்மை கொண்ட ஒரு மாநிலத்திற்கு, வளர்ச்சியின் இயந்திரமாகச் செயல்படக்கூடிய நவீன மற்றும் எதிர்கால உள்கட்டமைப்பு அவசியமாகும். இதற்காக, தற்போதைய மாநில அரசால் ஏற்பட்டுள்ள தடைகளை அகற்றி மாநிலம் முழுவதும் நிலுவையில் உள்ள முக்கிய இரயில்வே திட்டங்களை முடிக்க, நிலத்தை நியாயமான விலையில் கையகப்படுத்துவதை உறுதி செய்வோம். மத்திய அரசுடன் இணைந்து, பின்வரும் திட்டங்களின் மூலம் **தமிழகத்தின் இரயில் இணைப்பை விரிவுபடுத்துவோம்**:
   a. **சென்னை - பெங்களூரு** மற்றும் **சென்னை - ஹைதராபாத்** இடையே **அதிவேக இரயில் வழித்தடங்கள்** (High Speed Rail Corridors).
   b. கொங்கு மண்டலத்தில் **கோவை - திருப்பூர் - ஈரோடு - சேலம்** வழித்தடத்தை இணைக்கும் **பிராந்திய அதிவேக போக்குவரத்து அமைப்பு** (RRTS).
   c. விழுப்புரம் - சென்னை இடையே **பிரத்யேக சிறு-நகர்ப்புற இரயில் சேவை** (Semi-Urban Rail).
   d. தமிழகத்தில் **ஹைட்ரோ பவர் ரயில்** திட்டம் (Hydro Power Train).

e. மத்திய அரசின் தொலைநோக்கு முயற்சியான புதிய **படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத்** (Sleeper Vande Bharat) இரயில்களை **சென்னை - மும்பை, சென்னை - கொல்கத்தா மற்றும் சென்னை - டெல்லி** உள்ளிட்ட முக்கிய வழித்தடங்களில் அறிமுகப்படுத்துதல்

f. தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் காரைக்கால் ஆகியவற்றை இணைக்கும் **மயிலாடுதுறை - காரைக்கால் இரயில் பாதையை சீரமைப்போம்**

2. தமிழகத்தின் விமானப் போக்குவரத்துத் துறையை மறுசீரமைக்க, தமிழக இளைஞர்களுக்குச் சர்வதேசப் பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குவோம். இதற்காக, **கோயம்புத்தூர், மதுரை மற்றும் தூத்துக்குடி விமான நிலையங்களை உலகத் தரத்திற்கு உயர்த்தி**, புதுப்பிப்போம்.

3. தமிழகத்தின் சுற்றுச்சூழல் பாதிப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், ஒரு **'பேரிடர் மீட்பு உள்கட்டமைப்பை'** உருவாக்குவோம். தமிழக மக்களுக்குப் பாதுகாப்பான சூழலை உறுதி செய்யவும், 'பாதுகாப்பான தமிழ்நாடு' என்ற இலக்கை அடையவும், பின்வரும் வலிமையான பேரிடர் மேலாண்மைக் கட்டமைப்புகளை ஏற்படுத்துவோம்:

a. **நவீன நீர் மேலாண்மை நுட்பங்களைப்** பயன்படுத்தி, நகர்ப்புற வெள்ள பாதிப்புகளின் சுழற்சியை முற்றிலுமாக ஒழிப்போம்.

b. ஆறுகளின் உபரி நீரை, நிலத்தடியில் ஆழமாகச் சேமித்து வைக்கும் **'ஸ்மார்ட் வெள்ள நீர் சேமிப்புச் சுரங்கங்கள்'** அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நடைமுறைப்படுத்துவோம்.

c. தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் அதிநவீன **'ஒருங்கிணைந்த அவசரகால செயல்பாட்டு மையங்கள்'** நிறுவப்படும்.

4. தமிழகத்தின் உற்பத்தி மையங்களைத் தேசிய விநியோகச் சங்கிலியுடன் நேரடியாக இணைப்பதன் மூலம், சரக்குப் போக்குவரத்து நேரத்தைக் குறைத்து, நமது தயாரிப்புகளை இந்தியச் சந்தையில் மிகவும் போட்டித்தன்மை வாய்ந்ததாக மாற்றுவோம். இதற்காக, **சென்னை - பெங்களூரு - ஹூப்பள்ளி - புனே ஆகிய நகரங்களை இணைக்கும் 'பிரத்யேக சரக்கு வழித்தடத்தை'** (Dedicated Freight Corridor) உருவாக்க மத்திய அரசுடன் இணைந்து செயல்படுவோம். தமிழக உற்பத்தியாளர்களுக்கு ஒரு இணைப்புப் பாலமாகத் திகழும் வகையில், சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் இதற்கான பிரத்யேக முனையங்கள் அமைக்கப்படுவதை உறுதி செய்வோம்.

5. நகர்ப்புறங்களை மக்கள் வாழ்வதற்கு உகந்ததாகவும், அதிக உற்பத்தித் திறன் கொண்டதாகவும்,



காலநிலை மாற்றத்தின் சவால்களைத் தாங்கி நிற்கும் வகையிலும் நாங்கள் மாற்றுவோம். இதற்காக, சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் நிலவும் **'நகர்ப்புற வெப்பத் தீவு விளைவை'** (Urban Heat Island Effect) கட்டுப்படுத்த **'புராஜெக்ட் ஹீட் ஷீல்ட்'** (Project Heat Shield) என்ற சிறப்புத் திட்டம் தொடங்கப்படும். மக்கள் நெருக்கம் அதிகம் உள்ள பகுதிகளில் வெப்பநிலையைக் குறைப்பதற்காக, மத்தியப்படுத்தப்பட்ட 'மாவட்ட குளிர்விப்பு அமைப்புகளை' (Centralised District Cooling Systems) நிறுவுவோம்.

6. கடலோரப் போக்குவரத்து மற்றும் சாலைக் கட்டமைப்பை ஒருங்கிணைத்து, தடையற்ற "கடல் மற்றும் சாலை" நுழைவுவாயிலை உருவாக்குவோம். இதற்காக, மத்திய அரசின் **'பாரத்மாலா'** (Bharatmala) திட்டத்தின் கீழ், சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையிலான **கிழக்குக் கடற்கரைச் சாலையை (ECR) நான்கு வழிச்சாலையாக மாற்றும் பணிகளை மத்திய அரசுடன் இணைந்து போர்க்கால அடிப்படையில் விரைவுபடுத்துவோம்**. இதன் மூலம் இந்த மிக முக்கியமான வழித்தடத்தில் வேகமான, பாதுகாப்பான மற்றும் சுமூகமான பயணத்தை உறுதி செய்வோம்.

7. வாரிசு அரசின் சுயநல ஆட்சி மற்றும் அவர்களின் பிளவுவாத அரசியலின் காரணமாகவே இந்தியாவின் முதல் 10 தூய்மையான நகரங்கள் பட்டியலில் தமிழ்நாட்டின் எந்தவொரு நகரமும் இடம்பெறவில்லை. மத்திய அரசின் முதன்மைத் திட்டமான **ஸ்வச் பாரத் இயக்கத்தின்** கீழ், தூய்மைக் குறியீட்டில் நமது மாநிலத்தின் நிலையை உயர்த்தி, முதல் 100 இடங்களுக்கான பட்டியலில் **தமிழ்நாட்டிலிருந்து 10 நகரங்கள் இடம் பெறுவதை உறுதி செய்வோம்**.

8. தமிழகத்தின் துறைமுகங்கள் பாரதத்தின் சர்வதேச வர்த்தகப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்கின்றன. தமிழகப் பொருளாதாரத்தை மேலும் வலுப்படுத்த, மத்திய அரசின் **'சாகர்மாலா'** திட்டத்தின் கீழ், **தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம் துறைமுகங்களை மேம்படுத்தி**, நவீனப்படுத்த மத்திய அரசுடன் இணைந்து போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

9. மத்திய அரசுடன் இணைந்து, மாநிலத்திற்குள்ளும் மாநிலங்களுக்கு இடையேயும் இயக்குவதற்காக **12,000 புதிய பேருந்துகள்**, மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் (MoHUA) விதிமுறைகளின்படி மாநில போக்குவரத்து கழகத்தில் கூடுதலாகச் சேர்க்கப்படும். இதில் குறைந்தபட்சம் பாதி பேருந்துகள், மத்திய அரசின் திட்டமான **'பி.எம். இ-பஸ் சேவாவின்'** (PM e-Bus Sewa) கீழ், மின்சாரப் பேருந்துகளாக (Electric Buses) இயக்கப்படும்.



# நீர் வளம் மற்றும் சுற்றுச்சூழல்



# வாக்குறுதிகள்



## செழிப்பான தமிழகத்திற்கான உத்திரவாதம்

**உண்மையான முன்னேற்றம் நீர் பாதுகாப்பிலிருந்தே தொடங்குகிறது. ஆனால், தற்போதைய அரசின் பல ஆண்டுகால அலட்சியத்தால், தமிழ்நாட்டில் பல குடும்பங்களும் விவசாயிகளும் இந்த அடிப்படை தேவையைப் பெற இயலாத நிலையில் உள்ளனர். ஒவ்வொரு குடும்பத்திற்கும், ஒவ்வொரு விவசாயிக்கும் வருடம் முழுவதும் தூய்மையான மற்றும் நம்பகமான நீர் கிடைக்கும் தமிழ்நாட்டை உருவாக்க வேண்டிய நேரம் இது. இதனை உருவாக்க, நதிகள் இணைப்பு, உவர்நீர் சுத்திகரிப்புத் திட்டங்கள் மற்றும் திறன்மிகு நீர் விநியோக அமைப்புகள் ஆகிய நவீன உள்கட்டமைப்பால் இயக்கப்படும் மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றுவதே பாஜகவின் நோக்கமாகும்.**

1. தமிழ்நாட்டை இந்தியாவின் **உவர்நீர் சுத்திகரிப்புத் தலைநகரமாக** (Desalination Capital) மாற்றி, குறிப்பாக தெற்கு மற்றும் டெல்டா மாவட்டங்களில் குடிநீர் பற்றாக்குறையை முற்றிலுமாகத் தீர்ப்போம். இதற்காக:

   a. வட்டப் பெருங்குழாய் வழித்தடங்கள் மற்றும் அழுத்தம்கூட்டப்பட்ட வலையமைப்புகள் மூலம் **அனைத்து நீர் ஆதாரங்களையும் இணைப்போம்.**

   b. **500 MLD** அளவுக்கு கூடுதல் குடிநீர் வழங்கும் **புதிய உவர்நீர் சுத்திகரிப்பு ஆலைகள்** நிறுவப்படும்.

   c. செயல்படக்கூடிய முன்மாதிரி மையத்துடன் கூடிய **தமிழ்நாட்டின் முதல் உவர்நீர் சுத்திகரிப்பு ஆராய்ச்சி மையம்** கடலூர் மாவட்டத்தில் அமைக்கப்படும்.

2. தமிழகத்தில் தற்போதைய மாநில அரசால் புறக்கணிக்கப்பட்டுள்ள ஜல் ஜீவன் மிஷன் என்ற மத்திய அரசின் முக்கிய திட்டத்தின் கீழ், தமிழகத்தின் அனைத்துத் தகுதியான வீடுகளுக்கும் **100% குழாய் மூலம் தூய்மையான குடிநீர் வழங்குவதை** உறுதி செய்வோம்.

3. தமிழ்நாட்டில் நிலவும் தற்போதைய சூழலில், சட்டவிரோத மணல் கொள்ளை, கல் மற்றும் கனிமச் சுரண்டல் குறித்த கவலைகள் அதிகரித்து வரும் நிலையில், மாநிலம் முழுவதும் காவல்துறையின் கீழ் **சிறப்புக் கண்காணிப்புக் குழு** அமைத்து இதுபோன்ற நடவடிக்கைகளைக் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டும், தடுக்கப்பட்டும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.


4. சென்னையில் உயிர்ப்புடன் உள்ள ஒரே சதுப்பு நிலமான **பள்ளிக்கரணை சதுப்புநிலத்தை** சட்டவிரோத ஆக்கிரமிப்புகளிலிருந்து பாதுகாத்து, வலுவான வெள்ளக் கட்டுப்பாட்டையும், செழிப்பான பல்லுயிர்ப் பெருக்கத்தையும், நமது நகரத்திற்குப் பாதுகாப்பான, பசுமையான எதிர்காலத்தையும் உறுதி செய்வோம்.

5. விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் நீர் கிடைப்பதை உறுதி செய்யவும், பாசனத்தை மேம்படுத்தவும் விவசாயப் பகுதிகளில் **தடுப்பணைகளைக்** கட்டுவோம்.





# சென்னை பகுதி





# தலை நகரம் தலை நிமிரட்டும்

**நகரப் புனரமைப்பும் பாரம்பரியப் பாதுகாப்புமே, உலகத் தரம் வாய்ந்த சென்னையின் அடித்தளங்களாகும். நகரத்தின் வரலாற்று உயிர்நாடிகளான ஆறுகளையும் கால்வாய்களையும் அவற்றின் பழமைமிக்க பெருமைகளை மீட்டெடுக்கவும், ஒவ்வொரு குடிமகனுக்கான வாய்ப்புகளை அளிக்கும் ஒருங்கிணைந்த வலையமைப்பைக் கட்டியெழுப்பவும் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். சென்னையின் அனைத்துப் பிரிவினரின் உரிமைகளுக்காகப் போராடுவதன் மூலமும், வடசென்னைக்கு சமத்துவமான வளர்ச்சியை உறுதி செய்வதன் மூலமும், அதன் கடந்த காலத்தைப் போற்றி, எதிர்காலத்தை வழிநடத்தும் ஒரு நிலையான, அனைவரையும் உள்ளடக்கிய, செழிப்பான மாநகரமாகச் சென்னையை மாற்றுவோம்.**

1. மாசடைந்த கூவம் நதி, அடையாறு நதி மற்றும் பக்கிங்ஹாம் கால்வாயை முழுமையாக சீரமைத்து, கழிவுநீர் மாற்றுத் திட்டங்கள் மற்றும் கரையோர மேம்பாட்டுப் பணிகளின் மூலம் சுத்தமான நீர்வழிகளாக மாற்றி **சிங்காரச் சென்னையைப்** புதுப்பிப்போம்.

2. காஞ்சிபுரம் நெசவாளர்களின் வளம், அவர்கள் உருவாக்கும் புடவைகளைப் போலவே செழிப்பாக இருப்பதை உறுதி செய்ய பாரம்பரிய திறன்களைப் பாதுகாத்து கைவினைஞர்களைக் காக்க உறுதிபூண்டுள்ளோம். நியாயமான விலையை உறுதி செய்யவும், சுரண்டலைத் தடுக்கவும், மூலப்பொருட்கள் கிடைப்பது முதல் சந்தைப்படுத்துதல் வரை முழுமையான ஆதரவை வழங்கவும், காஞ்சிபுரம் பட்டுப் புடவை நெசவாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும் **காஞ்சிபுரம் பட்டுப் புடவை நெசவாளர்கள் நலக் குழு** ஒன்றை அமைப்போம்.

3. பக்கிங்ஹாம் கால்வாயைத் தூர்வாரி புனரமைப்போம். மேலும், தடையற்ற இணைப்பை வழங்கவும், நமது நகரத்திற்கு வேகமான, மலிவான, சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒரு புதிய உயிர்நாடியை அளிக்கவும், சென்னை சென்ட்ரலில் இருந்து கோவளம் வழியாக மகாபலிபுரம் வரை 55 கி.மீ. தொலைவிற்குச் **'சென்னையின் முதல் நீர் மெட்ரோவைத்'** தொடங்குவோம்.

இந்த பிரம்மாண்ட நீர்வழிப் போக்குவரத்து, நமது கடல்சார் பாரம்பரியத்தை எதிர்கால நகரப் போக்குவரத்துடன் தடையின்றி இணைத்து, பயணிகளுக்கு ரம்மியமான, போக்குவரத்து நெரிசல் இல்லாத, மலிவான ஒரு மாற்று வழியை வழங்கும்.

4. **சென்னை மெட்ரோவின் இரண்டாம் கட்டப் பணிகளைப்** போர்க்கால அடிப்படையில் முடித்து, நகரம் முழுவதும் வேகமான, தடையற்ற மற்றும் சிரமமற்ற இணைப்பை உறுதி செய்வோம். இந்த விரிவாக்கத்தின் மூலம், ஒவ்வொரு பகுதியும் வேகமான, பாதுகாப்பான மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்தால் இணைக்கப்பட்டு, சாலை நெரிசலையும் கரியமில வாயு வெளியேற்றத்தையும் பெருமளவில் குறைக்கும் ஒரு உண்மையான ஒருங்கிணைந்த நகரம் உருவாக்கப்படும்.

5. **வளமான வட சென்னை** திட்டத்தின் மூலம் வடசென்னையில் அடிப்படை வசதிகளும் உள்கட்டமைப்புகளும் மேம்படுத்தப்பட்டு, நிலையான வாழ்க்கைத் தரமும் சமத்துவமான நகர வளர்ச்சியும் உறுதி செய்யப்படும்.

6. முறைசாரா பொருளாதாரத்தின் முதுகெலும்பான சாலை வியாபாரிகள் திமுக ஆட்சியில் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த, மத்திய அரசின் முன்னோடி திட்டமான **பி.ம். ஸ்வநிதி** திட்டத்தின் கீழ் (பிரதமரின் சாலையோர வியாபாரிகள் திட்டம்) **சென்னையின் சாலையோர வியாபாரிகள் அனைவரும் 100% பயனடைவதை** உறுதி செய்வோம். இது புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையை ஏற்படுத்தி, அவர்கள் நிலையான பொருளாதார முன்னேற்றத்தை அடைய உதவும்.





# கொங்குப் பகுதி



# வாக்குறுதிகள்



## கொங்குப் பகுதிக்கு எங்கள் வாக்குறுதி

**தொழில்முனைவு மனப்பாங்கும் தன்னிறைவு எண்ணமும் கொண்ட கொங்கு மண்டலம் தமிழகத் தொழில்துறையின் இதயத்துடிப்பாகும். நூற்பாலை, மஞ்சள், கயிறு, கோழி வளர்ப்பு போன்ற துறைகளில் நவீன மதிப்புக் கூட்டல் மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகளை உருவாக்கி, இந்த வளர்ச்சியின் இயந்திரத்தை மேலும் வலுப்படுத்துவது எங்கள் நோக்கமாகும். நிலையான உள்கட்டமைப்பில் முதலீடு செய்வதன் மூலமும், உள்ளூர் கைவினைத்திறனுக்கு உலகளாவிய அங்கீகாரத்தைப் பெறுவதன் மூலமும், ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை நோக்கிய மாநிலத்தின் பயணத்தைக் கொங்கு மண்டலத்தின் கடின உழைப்பாளிகள் முன்நடத்துவதை நாங்கள் உறுதி செய்வோம்.**

1. பொள்ளாச்சியை மூலப்பொருள் ஆதாரமாக மட்டுமல்லாமல், ஒரு உலகளாவிய தொழில்துறை தலைமையகமாகவும் மாற்ற, உலகத்தரமான தேங்காய் நார் மதிப்புக்கூட்டல் மற்றும் ஏற்றுமதி மையத்தை நிறுவுவோம். மூல தேங்காய் நாரை சர்வதேச அளவில் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றுவதற்காகப் **பொள்ளாச்சியில் தேங்காய் நார் மதிப்புக்கூட்டல் மற்றும் ஏற்றுமதி மையம் அமைப்போம்**.

2. மத்திய அரசு, திருப்பூரைத் தமிழ்நாட்டின் வளர்ச்சி இயந்திரமாகவும், ஜவுளி மையமாகவும் அடையாளம் கண்டுள்ளது. இதை மேலும் முன்னேற்ற, **திருப்பூரில் ஒரு மாநில அளவிலான ஜவுளிப் பூங்காவை** அமைப்பதன் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs) வளர வழிவகை செய்வதோடு, 'ஏற்றுமதிக்கு முன்னுரிமை' கொள்கையின் கீழ், ஏற்றுமதியின் அளவு அதிகரிக்கப்படும்.

3. இந்தியாவின் மொத்த மஞ்சள் விநியோகத்திற்குப் பங்களிக்கும் ஈரோட்டில், மஞ்சள் சாகுபடியாளர்களுக்கு **ஏக்கருக்கு ₹10,000 உள்ளீட்டு மானியம்** அறிமுகப்படுத்துவோம்.

மேலும், **APEDA மற்றும் FPO தலைமையிலான ஒருங்கிணைப்பை விரிவுபடுத்தி**, டிஜிட்டல் ஏலங்களில் விவசாயிகளின் பங்கேற்பை அதிகரித்து, புவிசார் குறியீடு பெற்ற தமிழக மஞ்சளுக்கான ஏற்றுமதியை அதிகரித்து, மஞ்சள் விவசாயிகளுக்கான சந்தை அணுகலை மேம்படுத்துவோம்.

4. கொங்கு மண்டலத்தில் விளையும் இன்றியமையாத வேளாண் பொருட்களுக்கு விரிவான ஆதரவு சூழலை உருவாக்குவோம். **ஈரோடு மஞ்சள், நாமக்கல் முட்டை, கோயம்புத்தூர் காய்கறிகள், நீலகிரி பழங்கள், சேலம் மாம்பழம், கரூர் தக்காளி** போன்ற (விரைவில் கெட்டுப்போகும்) கொங்கு மண்டலத்தின் அனைத்து முக்கிய பொருட்களையும் இணைக்கும் வகையில் சூரிய ஆற்றலால் இயக்கப்படும் குளிர்சாதன சங்கிலிப் பாதை உருவாக்கப்படும்.

5. சேலத்தின் வெள்ளி கைவினைக் கலைஞர்களின் நுட்பமான கைவினைப் பாரம்பரியத்தைக் கௌரவிக்கும் வகையில், **சேலம் கொலுசுக்குப் புவிசார் குறியீடு பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்**.





# தெற்குப் பகுதி





# தென் தமிழகத்திற்கு எங்கள் வாக்குறுதி

**நமது நாகரிகத்தின் வேராகவும், தமிழகத்தின் ஆன்மாவாகவும் திகழும் புனிதமான நிலம் இந்தப் பாண்டிய மண். தொன்மையான கோயில் மரபுகள், கடல் கடந்த வணிகம் மற்றும் கடல்சார் பெருமை, தென் தமிழக மக்களின் அசராத உழைப்பு எனத் தனித்துவமான பெருமைகளைக் கொண்ட இப்பகுதியின் மாண்பினை நாங்கள் போற்றிப் பாதுகாப்போம். பாரம்பரியப் பெருமையுடன் நவீனத் தொழில்நுட்பத்தையும் இணைத்து, இம்மண்ணின் உழைக்கும் கரங்களுக்கு வலு சேர்ப்போம். தென்தமிழகத்தின் ஆன்மீகச் செழுமையும், பொருளாதாரத் துடிப்பும் ஒன்றிணைந்து, நம் மாநிலத்தின் முன்னேற்றத்தை முன்னின்று வழிநடத்தும் எதிர்காலத்தை நாங்கள் உருவாக்குவோம்.**

1. **சிறப்புப் பொருளாதார மண்டல** (SEZ) அந்தஸ்து **விருதுநகர்-சிவகாசி-சாத்தூர்** பகுதிகளுக்கு வழங்கப்பட்டு, அங்குள்ள அச்சு மற்றும் தீப்பெட்டித் தொழில்கள் உலகளாவிய ஏற்றுமதித் தரத்திற்கு நவீனமயமாக்கப்படும். இதன் மூலம் இத்துறையை வாழ்வாதாரமாகக் கொண்ட பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் எதிர்காலம் பாதுகாக்கப்படும்.

2. ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்கள் முழுவதும் போதுமான எண்ணிக்கையில் **RO குடிநீர் ஏடிஎம்கள்** நிறுவப்படும். இதன் மூலம், 24 மணிநேரமும் பாதுகாப்பான, குறைந்த விலையிலான குடிநீர் பொதுமக்களுக்குக் கிடைப்பதோடு, நீர் மூலம் பரவும் நோய்களின் அபாயமும் முற்றிலுமாக ஒழிக்கப்படும்.

3. பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்காகத் தென்காசியில் **பிரத்யேகத் திறன் மேம்பாட்டு மையம்** அமைக்கப்படும். இம்மையம், ஆடை உற்பத்தி, உணவு மதிப்புக்கூட்டல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் போன்ற அதிக வேலைவாய்ப்புள்ள துறைகளில் சிறப்புப் பயிற்சிகளை அளித்து, எதிர்காலத்திற்கான ஒரு பாலமாகத் திகழும். இதன் மூலம், நமது பாரம்பரியத் தொழிலாளர்கள் பாதுகாப்பான, அதிக ஊதியம் தரும் நிலையான நவீனத் தொழில்களுக்குத் தங்களைத் தகவமைத்துக் கொண்டு, புதிய உயரங்களை எட்ட வழிவகை செய்யப்படும்.

4. மதுரை என்றால் மீனாட்சி அம்மன்; மதுரை என்றால் மல்லிகைப் பூ. மதுரையின் இந்த மணம்மிகு அடையாளத்தையும், மலர் சாகுபடியையும் உலக அரங்கிற்கு எடுத்துச் செல்ல பின்வருவனவற்றை மேற்கொள்வோம்:

a. தென் மாவட்ட மலர் விவசாயிகளுக்கான நேரடியான, ஒழுங்கமைக்கப்பட்ட வெளிப்படையானசந்தைமுறையைஉருவாக்குவதற்காக,மதுரையைத்தலைமையிடமாகக் கொண்டு **'தமிழ்நாடு மலர் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சந்தைப்படுத்தல் சங்கம்'** (Tamil Nadu Floriculture Producers' Co-operative Marketing Society) நிறுவப்படும்.

b. உலகப்புகழ் பெற்ற மதுரை மல்லிகையை உயர்தர எண்ணெய்களாகவும், சர்வதேசத் தரம் வாய்ந்த வாசனைத் திரவியங்களாகவும் மாற்ற, மதுரையில் ஒரு பிரத்யேக **வாசனைத் திரவியத் தொழிற்சாலை** நிறுவப்படும். இது முழுமையாக **மகளிர் சுயஉதவிக் குழுக்களால்** (SHGs) நிர்வகிக்கப்படும்.

c. மல்லிகை உள்ளிட்ட பல்வேறு மலர்கள் சிறந்த தரத்தில் சந்தைகளைச் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில், **நவீனக் குளிர்பதனச் சேமிப்புக் கிடங்குகள்** அமைக்கப்படும்.






# வடக்குப் பகுதி



# வாக்குறுதிகள்



## வட தமிழகத்திற்கு எங்கள் வாக்குறுதி

**வடக்குப் பகுதி தமிழ்நாட்டின் முக்கிய தொழில்துறை நுழைவாயிலாக இருந்து, நமது தமிழகப் பாரம்பரிய மரபையும் பொருளாதார வளர்ச்சியையும் இணைக்கும் முக்கிய பாலமாக விளங்குகிறது. இந்தப் பகுதியின் இன்றியமையாத நீர் உயிர்நாடிகளை மீட்டெடுத்து, அதன் இயற்கை அதிசயங்களை உலகத்தரமான சுற்றுலா இடங்களாகப் புத்துயிர் அளிப்பதன் மூலம் இந்தப் பகுதியின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதே எங்கள் நோக்கம். புகழ்பெற்ற உற்பத்தி வளங்களை நவீனப்படுத்துவதுடன், தொழிலாளர்களின் மரியாதை மற்றும் நலன்களை உறுதி செய்து, விவசாய உற்பத்திகளை உலக சந்தைகளுக்குக் கொண்டு செல்லும் வாய்ப்புகளையும் விரிவுபடுத்துவோம். இதன் மூலம் புதுமை, நிலைத்தன்மை மற்றும் அனைவருக்கும் சமமான வளர்ச்சி கொண்ட சக்திவாய்ந்த வட தமிழகத்தை உருவாக்குவோம்.**

1. நீர்ப்பாசனக் குளங்கள் கோடை காலத்தின் உச்சத்திலும் கூட நமது விவசாயிகளுக்கு வற்றாத உயிர்நாடிகளாகத் தொடர்ந்து விளங்க, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரத்தில் உள்ள 36 குளங்களுக்குத் தடையற்ற நீர் ஓட்டத்தை உறுதி செய்ய **நந்தன் கால்வாய் திட்டத்தை** மீட்டெடுப்போம்.

2. வரும் தலைமுறையினருக்குத் தெளிந்த குடிநீரையும் ஆரோக்கியமான சூழலியலையும் உறுதிசெய்து, “புனிதமான பளபளக்கும் தென்பெண்ணை” நதியை மக்களுக்கு மீண்டும் வழங்குவதே எங்கள் இலக்கு. இதற்காகத் தொழிற்சாலைக் கழிவுகள் மற்றும் இரசாயன நுரைகளை அகற்றி, **தென்பெண்ணை நதி மற்றும் கேளவரப்பள்ளி அணை** சீரமைக்கப்பட்டு, தூய்மையான மற்றும் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதை உறுதி செய்வோம்.

3. தமிழ்நாட்டின் தோல் தொழில் உலகளவில் முன்னணியில் இருக்க தொழிலாளர்களின் பாதுகாப்பும் மரியாதையும் அடித்தளமாக அமையும் என்பதை உறுதியளிக்கிறோம். இதனை உறுதி செய்ய, வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களை உள்ளடக்கிய நவீன **“தோல் தொழில் வழித்தடம்”** (Leather Corridor) உருவாக்கப்படும்.

மேலும், ராணிப்பேட்டை-வேலூர் பகுதிகளில் உள்ள அனைத்துத் தோல் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கும் முழுமையான சுகாதார மற்றும் விபத்துக் காப்பீடு கட்டாயமாக்கப்பட்டு, இரசாயன பாதிப்புகளைக் கண்டறிய முறையான மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

4. நமது மாநிலத்தின் இயற்கை வளங்களின் அழகை உலகுக்கு அறிமுகப்படுத்த, **ஒகேனக்கல் அருவி முக்கிய சுற்றுலா மையமாக மேம்படுத்தப்பட்டு**, உள்ளூர் மக்களால் மேலாண்மை செய்யப்படும் வகையில், உணவகங்கள், விடுதிகள் மற்றும் கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள் வலுப்படுத்தப்படும்.

5. மாம்பழ விற்பனையை உயர்மதிப்பு ஏற்றுமதியாக மாற்றி, விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தை **மாம்பழ உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மையமாக** மாற்றுவோம். விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தி, உள்ளூர் வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில், பதப்படுத்துதல், குளிர்பதனக் கிடங்கு, மதிப்புக்கூட்டல் மற்றும் சந்தை அணுகல் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் ஒரு அதிநவீன மாம்பழப் பதப்படுத்தும் பிரிவையும் விநியோகச் சங்கிலி உள்கட்டமைப்பையும் நிறுவுவோம்.





# டெல்டா பகுதி





# டெல்டா பகுதிக்கு எங்கள் வாக்குறுதி

**சோழர்களின் காலத்தால் அழியாத பாரம்பரியமும், நமது விவசாயிகளின் அயராத உழைப்பு உணர்வும் ஒன்றிணையும் டெல்டா பகுதி நமது நாகரிகத்தின் புனிதமான தொட்டிலாகும். சோழ மன்னர்களால் முதலில் உருவாக்கப்பட்ட நுட்பமான நீர்ப்பாசன வலையமைப்புகளை நவீனப்படுத்தி, காவேரியின் உயிர்தரும் நீரானது, கடைமடை ஏக்கர் வரை சென்றடையும் வகையில் உறுதி செய்வதன் மூலம் "தெற்கின் நெற்களஞ்சியம்" என்ற இந்தப் பகுதியின் பெருமையை மீட்டெடுப்பதே எங்கள் நோக்கம். ஆன்மீகப் பாரம்பரியத்தைப் போற்றி, கடலோரப் பகுதிகளை இயற்கை பேரிடர்களிலிருந்து பாதுகாத்து, புனிதப் பயணிகளின் வசதிகளை மேம்படுத்தி, டெல்டா பகுதியின் பொருளாதார வளமும் பண்பாட்டு ஆன்மாவும் தலைமுறைகள் தழைத்து வளரப் பாதுகாப்போம்.**

1. காவிரி வெறும் நீர்வளம் அல்ல; அது கொண்டாடப்பட வேண்டிய தமிழக வேளாண் அடையாளமாகும். இதனைப் பாதுகாத்து முன்னெடுக்க, ஆடிப் பெருக்கு நாளை முன்னிட்டு டெல்டா மாவட்டங்களில் ஆண்டுதோறும் "காவிரித் திருவிழா" கொண்டாடப்படும். இது காவிரியின் பண்பாட்டு, ஆன்மீக மற்றும் சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தைப் போற்றும் விழாவாக அமையும்.

2. காவிரி தமிழ்நாட்டு விவசாயிகளின் உயிர்நாடியாகும். அனைத்து விவசாயிகளுக்கும் நீர் பாதுகாப்பை உறுதி செய்ய, கல்லணை, வெண்ணாறு, வெட்டாறு உள்ளிட்ட முக்கிய கால்வாய்கள் அனைத்தும் நவீனப்படுத்தப்பட்டு, தானியங்கி நீர்வாயில்கள் (automated sluice gates) நிறுவப்பட்டு, ஒவ்வொரு குருவை மற்றும் சம்பா பருவத்திற்கும் கடைமடை விவசாயிகளுக்கும் நீர் சென்றடையும் வகையில் ஏற்பாடு செய்யப்படும்.

3. சோழநாட்டின் உயிரோட்டமான கோயில்கள் மூலம் தமிழ் கலாச்சாரம் உயர்ந்து நிற்கிறது. அனைவரும் இவற்றை எளிதில் அணுகும் வகையில், நவகிரகக் கோயில் சுற்றுலாப் பேருந்து சேவையின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கி, கூடுதலாக 5 குளிரூட்டப்பட்ட பேருந்துகளையும் சேர்த்து, அச்சேவையை வலுப்படுத்தி விரிவுபடுத்துவோம்.

4. விவசாயிகளின் பொருளாதார பாதுகாப்பே வளமான தமிழ்நாட்டின் அடிப்படை. நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் மழையால் ஏற்படும் பயிர் சேதங்களைத் தடுக்கும் வகையில் வடிகால் அமைப்புகள், அணைக்கட்டுகள் மற்றும் வயல்வெளி நீர்மேலாண்மை அமைப்புகள் வலுப்படுத்தப்படும்.

5. தமிழ்நாட்டின் கடலோரப் பொருளாதாரம் மாநிலத்தின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானது. இதனைப் பாதுகாக்க, நாகப்பட்டினத்தில் தனித்துவமான கடலோர தயார்நிலை மையங்கள் (Coastal Preparedness Centres) அமைக்கப்படும். இவை முன்னெச்சரிக்கை தகவல் பரப்புதல், வெளியேற்ற திட்டமிடல், அவசரகால பயிற்சி மற்றும் நிவாரணத் தயார்நிலை போன்றவற்றை ஒருங்கிணைத்து, புயல், வெள்ளம் மற்றும் கடல் அலைகளின் போது கடலோர மக்களைச் சிறப்பாகப் பாதுகாக்க உதவும்.



# தேர்தல் அறிக்கை குழு



**டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன்**
தேர்தல் அறிக்கை குழு ஒருங்கிணைப்பாளர்



**திரு. வி பி துரைசாமி**
தேர்தல் அறிக்கை குழு உறுப்பினர்



**டாக்டர். கே பி ராமலிங்கம்**
தேர்தல் அறிக்கை குழு உறுப்பினர்



**டாக்டர். இரா. அர்ஜுனமூர்த்தி**
தேர்தல் அறிக்கை குழு உறுப்பினர்



**டாக்டர். பி.கனகசபாபதி**
தேர்தல் அறிக்கை குழு உறுப்பினர்



**பேராசிரியர். இராம ஸ்ரீனிவாசன்**
தேர்தல் அறிக்கை குழு உறுப்பினர்



**திருமதி. பி கார்த்தியாயினி**
தேர்தல் அறிக்கை குழு உறுப்பினர்



**திரு. சி நரசிம்மன்**
தேர்தல் அறிக்கை குழு உறுப்பினர்



**திரு. கே எஸ் ராதாகிருஷ்ணன்**
தேர்தல் அறிக்கை குழுத் துணை ஒருங்கிணைப்பாளர்



**திரு. ஏஎன்எஸ் பிரசாத்**
தேர்தல் அறிக்கை குழு உறுப்பினர்



**பேராசிரியர். ராஜலட்சுமி**
தேர்தல் அறிக்கை குழு உறுப்பினர்



**திரு. ஆர் ரவிச்சந்திரன்**
தேர்தல் அறிக்கை குழு உறுப்பினர்



**திரு. ஆர் ஆதித்ய சேதுபதி**
தேர்தல் அறிக்கை குழு உறுப்பினர்





# பாரதிய ஜனதா கட்சி
# தமிழ்நாடு



தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு வாக்களிப்பீர்